வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

19.01.2021 செவ்வாய்க்கிழமை




## அரசுக்கு இம்முறை ஜெனிவா பெரும் சவாலாகவே இருக்கும்!

### கூறுகிறார் ரோஹித போகொல்லாகம



கொழும்பு, ஜன. 19

ஜெனிவா பெரும் சவாலாக இருக்கப்போகிறது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப் புலிகளுடனான தங்கள் தொடர்புகள் காரணமாக களங்கப்பட்ட பலர் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை பலவீனப்படுத்துவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவை பெற முயல்கின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின்

02

## சுகாதார அமைச்சில் 8 பேருக்கு தொற்று

### கல்வி அமைச்சர் உட்பட 77 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஜன.19

சுகாதார அமைச்சில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுடன் தொடர்புகளைப் பேணி 77 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 8.30 மணிவரையான காலப் பகுதியில் 332 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

02

# குருந்தூர்மலையில் புத்தர் சிலை; பிடுங்கப்பட்டது ஐயனார் சூலம்!



## கொரோனாவுக்கு மத்தியில் பௌத்த மயமாக்கல் தீவிரம்

முல்லைத்தீவு, ஜனவரி 19

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் இருந்த ஆதி ஐயனார் சூலம் பிடுங்கப்பட்டு, அதே இடத்தில் புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு, தொல்பொருள் ஆய்வுப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று தொல்பொருள் ஆய்வுப் பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

02

பருத்தித்துறை வீடொன்றில்

## 19 பவுண் நகை திருட்டு; பெண் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜன. 19

பருத்தித்துறை நகரில் உள்ள வீடொன்றில் சுமார் 19 பவுண் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் மற்றும் அவருக்கு உதவிய ஆண் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அடிக்கடி சென்று வரும் வீட்டிலேயே அந்தப் பெண் தனது கைவரிசையைக் காட்டியுள்ளார்.

பருத்தித்துறை நகரில் உள்ள வீடொன்றில் கடந்த சில தினங்களுக்கு முன்பு தங்க நகைகள் காணாமற்போயிருந்தன. அது தொடர்பில்

02

## பருத்தித்துறையில் இருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம்,ஜன.19

பருத்தித்துறையில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்து வர் ஆ.கேதீஸ்வரன்

02

## பிரதமர் மஹிந்த தனிமையிலா?

கொழும்பு, ஜன. 19

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கொரோனா ஏற்பட்டதாகவோ அல்லது அவர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவோ வெளியாகிய செய்திகளில் உண்மையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லங்காதீப வார இறுதிப் பத்திரிகையில் பிரதமர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்

02

## குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை வழங்க நடவடிக்கை

### சரத் வீரசேகர - அலி சப்ரி சந்திப்பில் விரிவாக ஆராய்வு

கொழும்பு,ஜன.19

பயம், சந்தேகம் இல்லாத சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப, குற்றங்களுக்கு எதிரான நியாயமான பொறிமுறை மூலம் குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை பெற்றுக்கொடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நீதி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நீதி அமைச்சர் அலி சப்ரியை நேற் றுத் திங்கள்கிழமை

02

## காணி சுவீகரிப்புக்கு எதிராக மண்டைதீவில் வீதி மறியல்!

### பொலிஸார் குவிக்கப்பட்டதால் பதற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்ப்பாணம் - மண்டைதீவுப் பகுதியில் பொதுமக்களின் காணிகளைக் கடற்படை முகாம் அமைக்க சுவீகரிப்பதற்கு எதிராக நேற்றுப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் பொலிஸார் குவிக்கப்பட்டதால் அங்கு பதற்றம் நிலவியது.

மண்டைதீவு ஜே- 107 கிராம உத்தியோகத்தர்

02



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## பருத்தித்துறையில்...

தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்திலிருந்து திரும்பிய இருவ ருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இந்த நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூட பரிசோதனையில் மன்னாரைச் சேர்ந்த இருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது - என்றார்.

## குருந்தூர் மலையில்...

இராணுவத்தின் 59 ஆவது படைப் பிரிவின் 591 ஆவது பிரிகேட்டால் ஏற்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இராணுவத்தினரின் கொடிகள் குருந்தூர் மலையைச் சூழ நாட்டப்பட்டு நூற்றுக்கணக்கான இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளுக்காக குருந்தூர் மலையிலிருந்து அருகிலுள்ள குமுழமுனை கிராமம் வரைக்கும் நிறுத்தப்பட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கபட்டது.

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காலத்துக்குள்ளும் அரசு மீளவும் பௌத்தமயமாக்கல் செயற்றிட்டத்தில் இறங்கியுள்ளமை தொடர்பில் பலராலும் விசனம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் குறித்த நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை குருந்தூர் மலைப் பகுதியில் நடைபெற்ற ஆக்கிரமிப்பு நிகழ்வில் இராஜாங்க அமைச்சருடன், தொல்பொருள் திணைக்களத்தின் செயலாளர், விரிவுரையாளர் அருண மனதுங்க, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரத்நாயக்க, தொல்பொருள் திணைக்கள மற்றும் படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த குருந்தூர் மலையில் பௌத்த தேரர்களால் விகாரை அமைக்க முயற்சித்தபோதும், அதற்கு முல்லைத் தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

இதையடுத்து, அவர்கள் தமது தொல்பொருள் இடமாக அதை நிறுவி, பௌத்த விகாரை அமைக்கும் நோக்குடன் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

மக்களின் முறைப்பாட்டின் பேரில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம் ஆகியோர் இந்தப் பகுதியைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் சென்றிருந்த நிலையில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களத்தினரும் தடைகளை ஏற்படுத்திய நிலையில் மிக நீண்ட வாய்தர்க்கத்தை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் உட்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். அந்த இடத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த பிரதேச ஊடகவியலாளர்களுக்கு நேற்றுமுன் தினம் அனுமதி மறுக்கட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்று இராஜாங்க அமைச்சர் வருகை தந்திருந்த நிலையில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த ஊடகவியலாளர்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி பிரதேச ஊடகவியலாளர்கள் தொல்லியல் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பிய நிலையில் பிராந்திய ஊடகவியலாளர்களும் இறுதியில் அனுமதிக்கப்பட்டனர். இருந்த போதிலும் அகழ்வாராய்ச்சி பணி இடம்பெறும் மலையில் உள்பகுதியில் காணப்பட்ட படையினர் பிரதேச ஊடகவியலாளர்களை "நீங்கள் தமிழா" எனக் கேட்டு வெளியே செல்லுமாறு பணித்ததோடு ஊடகவியலாளர்களைப் புகைப்படமும் எடுத்தனர்.

## சுகாதார...

அவர்கள் அனைவரும் பேலிய கொடை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையில் இது வரை 53 ஆயிரத்து 409 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர் களில் 45 ஆயிரத்து 820 பேர் குணமடைந்துள்ளதோடு 7324 தொற்றாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். 717 பேர் தொற்று அறிகுறிகளுடன் சந்தேகத்தின் அடிப்படையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர் என சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்கு கொரோனா தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுடன் நெருங்கிப் பழகியதை அடுத்து கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுயதனிமையில் இருக்க தீர்மானித்துள்ளார்.

தனது குடும்பத்தினருடன் சுயதனிமையில் உள்ளவர்களாக என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-எ)

## அரசுக்கு....

அமர்விற்கு முன்னதாக ஒருங்கிணைந்த முயற்சிகள் இடம்பெறு கின்றன.

நான்கு தமிழ்க் கட்சிக் கூட்டணி சிவில் சமூகத்தவர்களின் ஆதரவுடன் இலங்கை தொடர்பான சர்வதேச பொறுப்புக் கூறும் பொறிமுறைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதனை உரிய முறையில் எதிர்கொள்ள வேண்டும்.

பயங்கரவாத மரபு சார்ந்த இராணுவ வழிமுறைகள் மூலம் ஈழத்தை பெறுவதற்கான தங்களின் முயற்சியில் தோல்வியடைந்தவர்கள், நாட்டை இன அடிப்படையில் பிரிப்பதில் இன்னமும் நம்பிக் கொண்டுள்ளவர்கள் சர்வதேச தலையீட்டை கோருகின்றனர்.

சர்வதேச தலையீடுகள் குறித்து தீவிரமாக உள்ளவர்கள் பொறுப்புக் கூறும் விடயத்தை பயன்படுத்தி அரசியல் செய்யவேண்டாம்.

இலங்கை 2009 இல் யுத்தத்தை வெற்றிகரமாக முடிவிற்கு கொண்டு வந்துள்ளது. வேலுப்பிள்ளை பிரபாகரனை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளும் படி தமிழ்தேசிய கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் கட்டாயப்படுத்தியமையை அந்த கட்சி மறந்துவிட்டது.

நந்திக்கடலில் விடுதலைப்புலிகளின் தலைவரின் தலையில் இராணுவம் துப்பாக்கி ரவையை செலுத்தும்வரை புலிகள் தாங்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை பயன்படுத்தினார்கள்.

புதிய தீர்மானம் கொண்டுவரப்படுவது நிச்சயம் என்பதால் இலங்கை மேலும் தாமதிக்காமல் நிலைமை குறித்து ஆராய்வது முக்கியமானது.

இங்கிலாந்தின் நேஸ்பி பிரபு தெரிவித்துள்ள விடயங்களையும் விக்கிலீக்ஸில் வெளியாகியுள்ள விடயங்களையும் இலங்கை தனக்கு சார்பாக வாதிடுவதற்காக பயன்படுத்தவேண்டும்.

வன்னி போர்முனையில் யுத்தத்தை நடத்துவதற்கு பிரிட்டனும் பிரான்ஸும் இணைந்து மேற்கொண்ட முயற்சிகள் அவர்கள் இந்த விடயத்தில் கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தின.

2013 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக அரசியலுக்கு வந்த விக்னேஸ்வரன் அந்த கட்சியி லிருந்து விலகியுள்ளபோதிலும் அவர் ஜெனிவா குறித்த பொது நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் இணைந்து செயற்படுகின்றார்.

ஜெனிவா பெரும் சவாலாகக் காணப்படப்போகின்றது. இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறலை விட மேற்குலக நாடுகளின் உண்மையான நலன்களும் நோக்கங்களும் பரந்துபட்டவை- என்றார்.

# கொரோனா மரணம் 270 ஆக அதிகரிப்பு!

கொழும்பு,ஜன.19

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 06 பேர் உயிரிழந்தனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 270ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுப்பதிவான மரணங்களில் பலர் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 3 பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயது பெண்ணொருவரும், கொழும்பு 15 பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயது ஆணொருவரும், முகத்துவாரம் பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயது ஆணொருவரும், களுத்துறை வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயது ஆணொருவரும், தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயது ஆணொருவரும், இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயது ஆணொருவரும் உயிரிழந்தனர் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

## பிரதமர்...

என்று செய்தி வெளியாகியிருந்தது.

எனினும், அதே பத்திரிகை நேற்று அந்தச் செய்தியை திருத்தி பிரசுரித்துள்ளது.

அதற்கமைய பிரதமர் தனிமைப் படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணி....

பிரிவுக்குட் பட்ட 29 பேரின் 18 ஏக்கர் பரப்புக் காணியை சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினரால் காணி அளவீடு செய்யப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காணி உரிமையாளர்களும், பொதுமக்களும், அரசியல்வாதிகளும் அங்கு திரண்டிருந்தனர். இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்ய வருகை தந்திருந்தனர்.

காணிகளை அளவீடு செய்ய கடும் எதிர்ப்பு வெளிப்படுத்திய நிலையில் காணிகளை அளவீடு செய்யாமலேயே நிலஅளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் செல்லத் தயாரான நிலையில் பொலிஸ் பாதுகாப்புடன் நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் மீண்டும் அங்கு வந்து காணிகளை அளவீடு செய்யப் போவதாக அறிவித்தனர்.

இருப்பினும் காணிகளை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாதென்று எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்களும் அரசியல் பிரமுகர்களும் காணிகளின் உரிமையாளர்களும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இதன் பின்னர் அங்கு வருகை தந்த வேலணைப் பிரதேச செயலாளர் சோதிநாதன், காணி அளவிடுவதை நிறுத்துவதாகவும் காணி அமைச்சுடன் இது தொடர்பில் பேசி அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாகவும், அதுவரை காணி அளவீடு மேற்கொள்ளப்படாதென்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து நிலஅளவைத் திணைக்களத்தினரும், பொலிஸாரும் திரும்பிச் சென்றனர். இந்தப் போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் பிரதேச மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய 4 தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றாக இணைந்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## குற்றவாளிகளுக்கு...

நீதி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போது இது தொடர்பில் ஆராயப்பட் டுள்ளது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த சந்திப்பின்போது, போதைப் பொருள் வியாபாரிகள், அதனை விநியோகிப்பவர்கள் மற்றும் அவர்களுக்கு எதிராக விரைவில் தண்டனை பெற்றுக்கொடுக்க தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் வெளிநாடுகளில் இருக்கும் போதைப் பொருள் வியாபாரிகளை நாட்டுக்கு அழைத்துவரவும் அந்த வியாபார வலைத்தளத்தை இல்லாமலாக்கவும் தேவையான செயல்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதேபோன்று சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகளை குறுகிய காலத்துக்குள் விசாரணை செய்து, மேல் நீதிமன்றங்களில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இதுதொடர்பில் இருக்கும் சட்ட திட்டங்களில் குறைபாடுகள் இருக்குமாக இருந்தால், அதனை இனங்கண்டு, தேவையான சட்ட திருத்தங்களை விரைவில் மேற்கொள்ளவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (அ-எ)

## 19 பவுண்...

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 19 பவுண் தங்க நகைகளைக் காணவில்லை என்றும் தமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்லும் பெண் ஒருவரில் சந்தேகம் உள்ளது என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை குற்றத் தடுப்புப் பொலிஸார், முறைப்பாட்டில் சந்தேக நபராகத் தெரிவிக்கப்பட்டிருந்த பெண்ணை நேற்றுக் கைது செய்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சுமார் 10 தங்கப் பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டன. அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்கள் இருவரும் இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்களை வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, இந்த திருட்டுடன் தொடர்புடைய மேலும் சிலரைத் தேடிவரும் பொலிஸார், சந்தேக நபர்களுக்கு வேறு கொள்ளை சம்பவங்களுடனும் தொடர்புள்ளதா என்ற கோணத்திலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu
19.01.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, தை 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மீண்டும் ஜே.ஆர். பாணி ரணிலின் அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - நானும் எங்கும் ஓடிவிடவில்லை - இருக்கின்றேன் - என்பதை காண்பிக்கும் வகையில் அவ்வப்போது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். அந்த வகையில், இப்போதும் ஓர் அறிவிப்பை செய்திருக்கின்றார். அதாவது, மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.ஆர்.ஜெயவர்த்தன வழியில் ஆட்சியைக் கைப்பற்றும். அதற்கான முயற்சியை செய்வோம் - என்று அறிவித்திருக்கின்றார்.

கடந்த பொதுத் தேர்தலில் மிக மோசமான தோல்வியை சந்தித்திருந்த ரணில், ஒரு நாளிலேயே, அரசியலின், கடைக்கோடி நிலைக்கு தள்ளப்பட்டார். தேர்தல்களில் தோல்வி ஏற்படுவது ஆச்சரியமானதல்ல. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் தோல்வி, தேர்தல் தோல்வியின் கீழ் வகைப்படுத்த முடியாதளவிற்கான ஒரு தோல்வியாகவே இருந்தது. ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பாரம்பரிய அரசியல் கட்சி. சஜித் பிரேமதாஸ என்னும் ஒருவரின் வெளியேற்றத்தினால், ஐக்கிய தேசியக் கட்சி அதல பாதாளத்திற்கு சென்றுவிட்டதாகக் கூறமுடியுமா? பாரம்பரியமான செல்வாக்கு மிக்க கட்சியொன்று, ஒரு தனிநபரின் வெளியேற்றத்தினால், இந்தளவிற்கு கடைக்கோடி நிலைக்கு சென்றுவிட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையானது, ஒருவேளை, முன்னரே மாற்றப்பட்டிருந்தால், அந்தக் கட்சி இவ்வாறானதொரு தோல்வியை சந்திருக்காது என்பதே பலரது பார்வை. இந்தப் பார்வையில் தவறில்லை. ஏனெனில், 2009இற்கு பின்னர் இடம்பெற்ற மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும், ரணில் விக்கிரமசிங்கவினால் போட்டியிட முடியவில்லை. அந்தளவிற்கு அவர் பலவீனமான நிலையில் இருந்தார். 2010இல் சரத் பொன்சேகா, 2015இல் மைத்திரிபால சிறிசேன, இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் சஜித் பிரேமதாஸ. - ஒரு பாரம்பரிய - செல்வாக்குமிக்க கட்சியின் தலைவராக இருந்த ஒருவரால் தொடர்ச்சியாக மூன்று முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாமல் போனதென்றால் - அதன் பின்னர் அந்தத் தலைமைப் பொறுப்பில் தொடர்ந்தும் இருப்பதென்பது அரசியல் ரீதியில் சரியானதொரு முடிவல்ல.

கட்சியின் எதிர்காலத்தை முன்னிறுத்தி சிந்தித்தால் புத்திசாதுரியமான முடிவல்ல. கட்சியின் தலைமைப் பொறுப்பை பிறிதொருவரிடம் ஒப்படைத்துவிட்டு, எவ்வாறு கட்சியை தூக்கி நிறுத்தலாமென்று மட்டுமே, ரணில் விக்கிரமசிங்க சிந்தித்திருக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டுமென்னும் எண்ணம் ரணிலிடம் இருந்திருந்தால், அவர் நிச்சயம் அதனைத்தான் செய்திருப்பார். ஆனால், ரணிலோ தலைமையை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. இந்த பின்புலத்தில்தான், ஐக்கிய தேசியக் கட்சி உள்ளுக்குள் மோசமாகப் பலவீனமடைந்து சென்றது. ரணிலுடன் இருப்பதன் மூலம் தங்களின் அரசியல் எதிர்காலத்தை பாதுகாக்க முடியாதென்று எண்ணியவர்களே, சஜித் பிரேமதாஸவின் தலைமையை ஏற்றுக் கொண்டனர். உண்மையில் அது சஜித்தின் வெற்றியல்ல மாறாக, ரணிலின் தலைமைத்துவத்தின் தோல்வி.

ஏற்கனவே, ஐக்கிய தேசியக் கட்சி, உள்ளுக்குள் மோசமான சிதைவை சந்தித்து கொண்டிருந்ததன் விளைவாகவே, கடந்த தேர்தலில் மோசமான தோல்வியை சந்திக்க நேர்ந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் - ஜே.ஆர். பாணியில், மீண்டும் ஆட்சியை கைப்பற்றப் போவதாக ரணில் தெரிவித்திருக்கின்றார்.

அரசியலில் எதுவும் சாத்தியமே! வீழ்ந்தவர்கள் எழுவதும் - வீழவே மாட்டார்கள் என்று கருதியவர்கள் வீழ்வதும்; நடந்திருப்பதும் நடக்கக்கூடியதும். ஐக்கிய தேசியக் கட்சி மீளவும் எழுச்சியுற்றால் அது ஆச்சிரியமானதல்ல. ஆனால், அதற்கான சோதனைகளுக்கு ரணில் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

# ஜெனிவா குறித்து அரசின் புதிய அணுகுமுறை!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கை அரசாங்கம் இத்தடவை ஜெனிவாவில் இடம்பெறவுள்ள 46ஆவது மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் ஒரு புதிய அணுகுமுறையுடன் தனது பங்களிப்பை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

இப்புதிய அணுகுமுறைக்கென ஓர் ஆணைக்குழுவொன்றை நியமிக்கவும் கடந்த கால பரிந்துரைகளை மீள்பரிசீலித்து புதிய யோசனைகளை முன்வைக்கவும் அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா பிரேணைகளில் இருந்து விலகியிருக்கப்போவதாகவே அரசு அறிவித்திருந்த நிலையில், புதிய அணுகுமுறையொன்றுக்கு அரசு தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ள விடயம், முற்று முழுதாக இலங்கை தொடர்பான ஜெனிவா மனித உரிமைப் பேரவை நடவடிக்கைகளை இலங்கை அரசு நிராகரித்துவிடவில்லை என்பதையே அறிய முடிகின்றது.

2016ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக கொண்டுவரப்பட்ட ஜெனிவா தீர்மானங்களை இழுத்தடித்து இறுதியில் எதனையும் கைகூட விடாமல் செய்வதில் இலங்கை அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணை நின்றிருந்ததை எவரும் மறுத்து விடமுடி யாது.

அன்றைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு துணை நின்று சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு 2016ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக கொண்டுவரப்பட்டிருந்த ஜெனிவா பிரேரணையை ஒப்பேற விடாது இலங்கை அரசுக்கு உதவிய நிலையில் யுத்தத்துக்கு பின்னரான அடிப்படை மனித உரிமைகளை இலங்கையில் மேம்படுத்துவது மற்றும் யுத்தக்குற்றங்கள் எனக் கண்டறியப்பட்டவை தொடர்பாக நீதி நியாயங்களை நிலை நாட்டுவதோடு புதிய அரசியல் அமைப்புடன் இனநல்லுறவை பலப்படுத்து குறித்த பல்வேறு அம்சங்களை ஜெனிவா பிரேரணை கொண்டிருந்தது.

**மிகப்பலமான நிலையிலுள்ள கோட்டாபய அரசு**

ஆனால், தற்சமயம் மிகப்பலமான நிலையிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஏற்கனவே இருந்து வருகின்ற ஜெனிவா பிரேரணையை ஏற்கப்பொவதில்லை எனத்தெரிவித்துள்ளதோடு ஆணைக்குழுவொன்றை நியமித்து புதிய யோசனைகளை ஜெனிவாவில் முன்வைக்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

இதேவேளை, தமிழ் அரசியல் கட்சிகளும் ஜெனிவாவில் தம்மிடையேயான அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஜெனிவாவில் தமது தரப்பு நியாயங்களை முன்வைப்பதற்கு அண்மையில் வவுனியா குருமண்காடு பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முடிவு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கமும், தமிழ் அரசியல் தரப்பும் ஜெனிவா மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடருக்கு முன்பதாக தம்மிடையே மனம் திறந்து விரிவான பேச்சுக்களை நடத்தி இரு சாராரும் ஜெனிவாவில் தத்தமது சார்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து நல்ல முடிவுகளை உள்நாட்டிலேயே எடுப்பதோடு சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் அவற்றை நடைமுறைப்படுத்த ஒரு புதிய பொறிமுறையை வகுக்க முடியாதிருக்குமோ என்ற கேள்வி கூட முனைப்படைவதையும் உணரக்கூடியதாக இருக்கின்றது.

**அரசின் நிலைப்பாடு**


இன்றைய அரசாங்கம் புதிய யோசனைகளை ஜெனிவாவில் கடந்தகாலங்களில் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் மீள்பரிசீலித்து புதிய யோசனைகளை முன்வைக்கப்போவதாக தெரிவித்துள்ளது. அரசின் உத்தேச யோசனைகள் ‘ஒரு கை ஓசையாக’ பட்சத்தில் அரச தரப்புக்கும் மறுபுறத்தே தமிழ் தரப்பும் தம்மிடையேயான முறுகல் நிலையைத் தொடர்ந்து கொண்டிருக்கும் என்றே கருத முடியும்.

அண்மையில், வவுனியாவின் குருமண்காட்டில் ஓரணியாக தமிழ் அரசியல் தரப்பு ஜெனிவாவில் சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளவை குறித்தும், அரச தரப்பு புதிதாக ஜெனிவாவில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள யோசனைகள் குறித்தும் இலங்கையில் இரு தரப்பும் பேச்சுக்களை நடத்தக்கூடிய ஒரு புதிய பொறிமுறை தோற்றுவிக்கப்படுமானால் இத்தடவை ஜெனிவாவில் தமிழ் அரசியல் தரப்புக்கும், அரச தரப்புக்குமிடையே நல்ல முடிவுகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கும் விதத்திலும் , வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் விதத்திலும் ஏற்படுத்த முடியுமென்றே கருத முடியும்.

இதைவிடுத்து, ஐரோப்பாவின் ‘பூங்காதேசம்’ என்றழைக்கப்படும் சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரை இலங்கையில் பத்து வருடங்களுக்கு முன்னர் முடிவுக்கு வந்த யுத்தத்துக்குப் பின்னரான அவலங்கள் குறித்து விவாதிப்பதற்கே இரு சாராரும் தொடர்ந்து பயன்படுத்தும்பட்சத்தில் பாதிக்கப்பட்டு நீதி, நியாயங்களுக்காக ஏங்கி நிற்கும் வடக்கு - கிழக்கு மக்கள் அரச தரப்பினர் மீதுமட்டுமல்ல. தமிழ் தரப்பின்மீது கூட நம்பிக்கை இழக்கும் சூழ்நிலைகளே வலுவடையும் எனக் கருதலாம்.

அத்துடன் சர்வதேச சமூகமும் இலங்கை குறித்து எள்ளி நகையாடும் சூழ்நிலைகளே தோற்றம்பெறும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# தலதா மாளிகை ஊழியர்கள் எவருக்கும் தொற்று இல்லை

கொழும்பு, ஜன. 17

கண்டி-தலதா மாளிகையின் ஊழியர்கள் எவருக்கும் கொரோனா தொற்று உறுதியாகவில்லை என அறிவிக்கப் பட்டுள்ளது.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களின் ஆலோசனையின் பேரிலும், தியாவதான தலைவர் மேற்பார்வையிலும் தினசரி மத அனுசரிப்புகள் மற்றும் பிற நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

நேற்று முன் தினம் வெளியிடப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தலதா மாளிகை வளாகத்தில் கடமையில் இருந்த பல பொலிஸாருக்கு தொற்று உறுதியாகியமையை வெளிப்படுத் தியது.

இவ்வாறு தொற்று உறுதியான பொலிஸார் தனி மைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதனை அடுத்து தலதா மாளிகை ஆலய ஊழியர்களிடம் கொரோனா பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.


இன்றைய ராசிபலன்

19.01.2021

மேடம்
திட்டமிட்ட காரியத்தில் திடீர் மாற்றம். தொழில் வளர்ச் சிக்கு மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு.மனக்கலக் கம் அகலும். பணியாளர்களின் ஒத்துழைப்பு.

இடபம்
காரிய வெற்றி. கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வருமானம் உயர புதுயுக்திகளைக் கையாள்வீர்கள். காரிய வெற்றிக்கு உறவினர்கள் ஒத்துழைப்பு உண்டு.

மிதுனம்
உற்சாகமான நாள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி. நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரிய மொன்றைச் செய்வீர்கள். உத்தியோக அனுகூலம்.

கடகம்
மகிழ்ச்சி கூடும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். ஒருவரால் வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வீர்கள். நன்மை உண்டு.

சிங்கம்
யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். காரியத்தை முடிக்க பிரயாசை எடுப்பீர்கள். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கையை விரிக்கலாம்.

கன்னி
விவகாரத்தால் ஏற்பட்ட விவகாரங்கள் அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் சேருவர். செய்தொழி லில் எதிர்பார்த்த லாபம். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

துலாம்
தேவைகள் பூர்த்தியாகும். வரன்கள் வாயிற் கத வைத் தட்டும். கனிவாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். உத்தியோக விருத்தியுண்டு.

விருச்சிகம்
பணத்தேவைகள் பூர்த்தியாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டுவந்து சேர்ப்பர். தொழில் துறையில் விருத்தி.

தனுசு
விரயங்கள் கூடும். சேமிப்பு செலவிற்கு கைகொடுக கும். நண்பர்களின் உதவி செய்வதாகச் சொல்லி விட்டுக் கடைசி நேரத்தில் கையை விரிப்பர்.

மகரம்
விரோதிகள் விலகும் நாள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களைச் சமாளிப்பீர்கள். உறவினர்களால் உதவி கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை.

கும்பம்
நல்லதகவல் இல்லம் தேடி வரும். தடைகள் விலகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

மீனம்
குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தொல்லைதந்தவர்கள் எல்லையை விட்டு விலகுவர். உத்தி யோக மாற்றம் உறுதியாகும்.

# நிலங்களை அபகரித்தால் சிவில் நிர்வாகம் முடங்கும்

## சிவாஜிலிங்கம் எச்சரிக்கை



யாழ்ப்பாணம்,ஜன.19

**பொதுமக்களின் நிலங்களை அபகரிப்பதற்கான முயற்சிகள் மீண்டும் இடம்பெற்றால் வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகம் முடங்கும் நிலையேற்படும் என முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று மண்டைதீவில் பொது மக்களின் காணிகளை இராணு வத்தினர் சுவீகரிப்பதற்கான நட வடிக்கைகளை மேற்கொண்ட வேளை அதனை கண்டித்து பொது மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்-

போன தடவையும் பொலிஸார் பேருந்து உடன் தான் வந்தனர். நீங் கள் மீண்டும் திருப்பி வரமுயற்சி செய்தால் நாங்கள் பகிரங்கமாக சொல்கின்றோம் , பிரதேச செயல கம், மாவட்ட செயலகம் உட்பட அனைத்தும்முடங்கும். சிவில்நிர்வா கம் முடக்கப்படும். வடக்கு-கிழக்கு முழுவதும் சிவில் நிர்வாகம் முடங் கும் நிலையேற்படும்-என்றார்.

# உளுந்து விலை 2 ஆயிரம் ரூபா



கொழும்பு, ஜன. 19

நாட்டில் உளுந்து இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதையடுத்து, சந் தையில் உளுந்தின் விலை இரண்டா யிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக் கும் நோக்கில், கடந்த வருடம் பல பொருட்களுக்கு அரசாங்கத்தினால் இறக்குமதித் தடை விதிக்கப்பட்டது.

இதனடிப்படையில், உளுந்து இறக்குமதிக்கும் கடந்த ஜூன் மாதம் முதல் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், நாட்டின் உளுந்து விலை அதிகரித்துள்ளதுடன், உளுந்துக்கு பாரிய தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட காலப் பகுதியில் 300 ரூபாவாகக் காணப் பட்ட ஒரு கிலோ உளுந்து, தற்போது சுமார் 2,000 ரூபாயாக அதிகரித்துள் ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

# 20 வைத்தியசாலைகளில் இன்று ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, ஜன. 19

நாடளாவிய ரீதியில் உள்ள 20 வைத்தியசாலைகளில் இன்று ஆர்ப் பாட்டம் நடத்துவதற்கு ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர் சங்கம் நட வடிக்கை எடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதார சேவையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, பாணந்துறை, எல் பிட்டி, பொது மருத்துவமனைகளி லும் கம்பளை ஆதார வைத்தியசாலை உள்ளிட்ட 20 வைத்தியசாலைகளில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற வுள்ளதாகவும் ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர் சங்கம் அறிவித்துள்ளது.



# மடு கல்வி வலயத்தில் 61 பேருக்கு நியமனம்

மன்னார், ஜன. 19

மடு கல்வி வலயத்தில் 61 பேருக்கு ஆசிரியர் நியமனம் நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

தேசிய கல்வியில் கல்லூரியில் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்த 61 ஆசிரியர்களுக்கே மடு வலயக் கல்வி அலுவலகத்தில் இவ்வாறு நியமனம் வழக்கப்பட்டது.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு மடு வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் தலைமையில் காலை 9.30 மணிக்கு மடு வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் மற்றும் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஜன. 19

வவுனியா- செட்டிகுளம் நகர்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில், ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

செட்டிகுளம் நகர்பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்றுகொண்டி ருந்த நபர் வீதியைக் கடக்க முற்பட்டபோது மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கடற்படைக்கு ஓர் அங்குலம்கூட நிலம் வழங்க தமிழர் தயாரில்லை

## கஜேந்திரன் எம்.பி. கூறுகின்றார்



யாழ்ப்பாணம்,ஜன.19

**கடற்படையினருக்கு ஓர் அங்குலம் நிலத்தை கூட வழங்குவதற்கு ஒட்டு மொத்த தமிழ்மக்களும் தயாரில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.**

நேற்று மண்டதீவில் பொதுமக்களின் காணிகளை இராணுவத்தினர் சுவீகரிப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளை அதனை கண்டித்து பொதுமக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போதே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் இதனை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

29 குடும்பங்களை சேர்ந்த மக்களும் தங்க ளின் சொந்த நிலங்களை இழக்க தயாரில்லை.

மீண்டும் மீண்டும் மக்களை குழப்பும் விதத் தில்காணி திணைக்களம் நடந்துகொள்கின்றது

பிரதேச செயலாளர் இந்த பிரதேசத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர் என்ற அடிப் படையில் அவர்களிற்கு இதனை தெரிவிக்க வேண்டும்.

மீண்டும் மீண்டும் நிலங்களை அளப்பதற்கு அனுப்புகின்றனர் ஆற்றில் ஒடும் நீர் நித்தி ரையா முழிப்பா என பார்ப்பதற்கு கொள்ளி வைத்து பார்ப்பது போல காணித் திணைக் களம் செயற்படுகின்றது.

இது மக்களை குழப்புகின்ற முயற்சி. மக்க ளிற்கு இதில் விருப்பமில்லை என காணித் திணைக்களத்திற்கும் அரசாங்க அதிபருக்கும் பிரதேச செயலாளர் தெரிவிக்க வேண்டும்.

மக்களை அபிவிருத்தி செய்து முன்னேற்று வதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை அர சாங்கம் எடுக்கவில்லை. காணிகளை பறிப் பதற்கு மாத்திரம் தான் அலுவல்கள் இடம் பெறுகின்றன.

காணித்திணைக்களத்திடம் இந்த நோக் கத்தை கைவிடுமாறு பிரதேச செயலாளர் தெரி விக்கவேண்டும். வாழ்க்கையில் கடற்படை யினருக்கு காணி கொடுப்பதற்கு ஒருபோதும் மக்கள் இணங்கமாட்டார்கள். இந்த மக்களும் தங்கள் காணிகளை விட்டுக்கொடுப்பதற்கு தயாரில்லை-என்றார்.

# சுகாதார விதிகளை மீறிய 27 பேர் கைது

கொழும்பு, ஜன. 19

நாட்டில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியக் குற்றச் சாட்டில் மேலும் 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றாமை ஆகிய குற்றச்சாட் டுக்களில் கடந்த 24 மணித்தியா லங்களில் இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைய கடந்த ஒக்ரோ பர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையிலான காலப்பகுதிக் குள் தனிமைப்படுத்தல் விதி முறைகளை மீறிய 2 ஆயிரத்து 605 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.





# யாழில் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பின!

யாழ்ப்பாணம், ஜன. 19

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவைகள், நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ்ப்பாணத் தில் இருந்து இரண்டு ரயில்கள் நேற்று புறப்பட்டன. காங்கே சன்துறையில் இருந்து காலை 5.30 மணிக்கு புறப்பட்டு, யாழ்ப் பாணத்தில் இருந்து காலை 6.10 மணிக்கு புறப்படும் உத்தரதேவி கடுகதி ரயிலும் காங்கேசன் துறையில் இருந்து காலை 9 மணிக்கு புறப்பட்டு, யாழ்ப் பாணத்தில் இருந்து 9.45 மணிக்கு புறப்படும் யாழ்.தேவி ரயில் சேவையும் நேற்று ஆரம்பமா கின.

அவ்வாறே கல்கிசையில் இருந்து காலை 5.55 மணிக்கும் கொழும்பிலிருந்து 6.35 மணிக்கும் புறப்படும் யாழ்.தேவி ரயிலும் முற்பகல் 11.50 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் உத்தரதேவி ரயிலும் நேற்று சேவையை ஆரம்பித்தன.

ஏனைய ரயில் சேவைகள் எதிர் வரும் 25ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படும். கொழும்பி லிருந்து புறப்படும் குளிரூட்டப் பட்ட ரயில் மற்றும் இரவு தபால் ரயில் உள்ளிட்ட அனைத்து ரயில் சேவைகளும் படிப்படியாக சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன.

பொதுமக்கள் வழமை போன்று ஆசனங்களை யாழ்ப் பாண ரயில் நிலையத்தில் முற் பதிவு செய்து கொள்ள முடியும்.

அத்தோடு உங்களுக்கு தேவை யான ஏதாவது விவரங்களுக்கு 021- 222 2271 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை மேற்கொண்டு அறிந்துகொள்ள முடியும்.

பயணிகள் சுகாதார நடை முறைகளை பின்பற்றி, ரயிலில் பயணத்தை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண ரயில் நிலைய அதி பர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.

(அ-03)

# ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி தொலைபேசியை பறித்த மருத்துவர்

வவுனியா,ஜன.19

வவுனியா ரயில் நிலையத்தில் ஊடகவியலாளர்களை அச்சுறுத் திய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா ரயில் நிலையத்துக்கு நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று பிற்பகல் முதலாவது ரயில் வந்தடைந்திருந்தது. இதன் போது ரயிலில் பயணித்த பயணி களுக்கு சுகாதார திணைக்களத்தின் ஒரு குழுவினரால் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட் டிருந்தது.

இதன் போது ரயிலில் பயணித்த பயணி ஒருவருக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்தச் செய்தியை உறுதிப்படுத்தி செய் தியாக்குவதற்காக இரு ஊடக வியலாளர்கள் வவுனியா ரயில் நிலையத்திற்கு சென்றிருந்தனர்.

இச்செய்தியை முறையான அனுமதியுடனும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி யும் ஊடகவியாளர்கள் சேகரித்து கொண்டிருந்தபோது ஊடக வியலாளர் ஒருவரின் தொலை பேசி வைத்தியர் ஒருவரால் பறிக் கப்பட்டது.




அத்துடன்அவர்அநாகரிகமாக பேசி அச்சுறுத்தியதுடன் ரயில் நிலையத்தை விட்டு வெளியே செல்லுமாறும் தெரிவித்தார்.

இதனையடுத்து ரயில் நிலை யத்தில் கடமையாற்றும் பொலி ஸாரால் வைத்தியரிடம் இருந்து குறித்த தொலைபேசி பெறப் பட்டு ஊடகவியலாளரிடம் கைய ளிக்கப்பட்டது. பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த இடத்தில் இருந்து இரு ஊடகவியலாளர்களும் வெளி யேறியிருந்தனர்.

# பியல் நிஷாந்தவுக்கு கொரோனா

கொழும்பு, ஜன. 19

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவருடன் தொடர்புடைய 10 ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைச்சர் வாசு தேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பி னர்ரவூப்ஹக்கீமுக்கும்கொரோனா தொற்று உறுதி செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது.




ஈழநாடு





# யாழ்.அரச அதிபருடன் படைத்தளபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன், யாழ்.மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டு இணைப்பதிகாரியும், மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் செனரத் பண்டாரவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள கொரோனா நிலைமைகள், எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், தற்போதைய நிலையில் பாடசாலைகள் மற்றும் பொதுச் சந்தைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக கொரோனா தொற்று பரவுவதைத் தடுத்தல் உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பலாலி இராணுவக் கட்டளை தலைமையக அதிகாரிகள், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டன. (அ-03)

# நாளாந்த தொற்று நிலவர அறிக்கையில் சந்தேகம்!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது



கொழும்பு, ஜன. 19

**அரசாங்கம் நாளாந்தம் வெளியிடும் கொரோனா தொற்று நிலவரம் தொடர்பான அறிக்கை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம் வெளியிட்டுள்ளது.**

மேலும் உக்ரைன் சுற்றுலாப் பயணிகளால் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட கொரோனா தொற்று இப்போது கண்டியில் உள்ள புனித இடங்களில் பரவி வருவதாகவும் அந்தக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என்றும் கூறினார்.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் தவறான அணுகுமுறையினால் 260 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார். ஆகவே, இந்த இறப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும், உடனடியாக சுகாதார அமைச்சர் பதவி விலக வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார வலியுறுத்தினார்.

# 1000 ரூபா இல்லையேல் சந்தாவை நிறுத்துவோம்

## தொழிலாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 19

தமக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டாவிட்டால் தொழிற்சங்கங்களுக்கான சந்தாப்பணத்தை நிறுத்துவதற்கு இம்முறை நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழிலாளர்களே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேற்படி பகுதிகளில் உள்ள எமது செய்தியாளர்கள் தொழிலாளர்களிடம் கலந்துரையாடிய போதே அவர்கள் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

தொழிலாளர்கள் வெளியிட்ட கருத்துகளின் சுருக்கம் வருமாறு,

அடிப்படை நாட் சம்பளமாக நாம் ஆயிரம் ரூபா கோரும்போது, அதில் அதிகரிப்பை மேற்கொள்வதற்கு கம்பனிகள் தயாரில்லை எனக்கூறப்படுகின்றது. அடிப்படை சம்பள விடயத்தில் தொழிற்சங்கங்களும் அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. அடிப்படை சம்பளம் உரிய வகையில் அதிகரிக்கப்படாமல் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனக்கூறப்படுவது ஏமாற்று வித்தையாகும்.

தொழிற்சங்கங்கள் பேரம் பேசி, எமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், எமக்காக பேரம்பேச முடியாத தொழிற்சங்கங்கள் எதற்கு? அவற்றுக்கு செலுத்தப்படும் சந்தாவை நிறுத்துவோம். இதன்மூலம் குறைந்தபட்ச எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். அதன்பின்னர் தக்க பாடம் புகட்டப்படும்.

ஆயிரம் ரூபா வழங்காவிட்டால் கம்பனிகளின் முகாமைத்துவம் பறிக்கப்படும் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தது. -என்றனர்.

# ஆசிரியர் இடமாற்றத்தில் பாரபட்சங்கள் வேண்டாம்

## யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 19

ஆறு வருடம் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள், தமக்கான இடமாற்றத்தை வழங்கக்கோரி போராட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுத்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகவும் இடம்பெற்றது.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை வலியுறுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தி, ஆசிரியர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத் தலைவர் உட்பட மத்திய கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர்களையும் அவர்கள் கையளித்தனர்.

இடமாற்றம் தொடர்பாக தமக்கு உரிய தீர்வை வழங்காவிடின், தேசிய ரீதியில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

# இவ்வாரம் 2 நாட்களே பாராளுமன்றம் கூடும்

கொழும்பு, ஜன. 19

பாதுகாப்பு பிரச்னைகள் காரணமாக இந்த வாரம் இரண்டு நாட்கள் மட்டுமே பாராளுமன்றம் கூடும் என நேற்றுக் காலை இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி பாராளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும் என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒன்பது ஊழியர்களுக்கும் கொரோனா தொற்று உறுதியானதைத் தொடர்ந்து, பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இதனையடுத்து, சி.சி.டி.ரி காட்சிகள் மூலம் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபர்களின் நெருங்கிய தொடர்புகளை அடையாளம் காண முடிவு செய்யப்பட்டது.

அந்தவகையில் தொடர்புகள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, இந்த மாதம் 15 ஆம் திகதி 13 ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட்டன.

சுமார் 943 பேரிடம் எடுக்கப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளை அடுத்து ஐந்து பாராளுமன்ற ஊழியர்களுக்கும் நான்கு பாதுகாப்புப் பணியாளர்களும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கவும், பாராளுமன்ற நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சந்தேக நபரின் வங்கிக் கணக்கில் 62 மில்லியன் கொடுக்கல் வாங்கல்

கொழும்பு, ஜன. 19

முகப்புத்தகத்தின் ஊடாக இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் பதிவுகளை பதிவிட்டதற்காக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பசால் மொஹமட் நிசார் எனும் வியாபாரியை உடனடியாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் மொஹமட் மிஹார் சிறைச்சாலைக் கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரின் வங்கிக்கணக்கில் சந்தேகத்திற்கிடமான முறையில் பாரிய அளவிலான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளமையால் அவரை 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த கோரிக்கையை ஏற்ற நீதவான், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்குமாறு சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நபரின் வங்கிக் கணக்கை அவதானித்ததில் கடந்த காலத்தில் 625 இலட்சம் ரூபாவுக்கு அதிகமான பணக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.



# முல்லைத்தீவு செயலகத்தின் தைப்பொங்கல் விழா நேற்று

முல்லைத்தீவு, ஜன. 19

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தைப்பொங்கல் விழா ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கலாசார அலுவல்கள் மற்றும் கிராமிய நிர்வாகக் கிளையின் ஒருங்கிணைப்பில் நேற்றுக் காலை மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அலுவலக ஊழியர்களால் அமைதியானமுறையில் பொங்கல் இடம்பெற்றது.

இந்த பொங்கல் விழாவில் மேலதிக அரசாங்க அதிபர், பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளைத்தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மக்கள் பயன்பாட்டுக்காக பொதுச்சந்தைகள் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணத்தில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த அனைத்து பொதுச் சந்தைகளும் நேற்று திங்கட்கிழமை மீளத் திறக்கப்பட்டன.

கடந்த மாதம் யாழ். மாவட்டத்தில் கொரோனா அதிகரித்தமை காரணமாக அங்குள்ள அனைத்து பொதுச் சந்தைகளும் சுகாதார பிரிவினரால் மூடப்பட்டிருந்தன. வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கிணங்க அவை நேற்று மீண்டும் மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி பொதுச்சந்தை, மருதனார்மடம் பொதுச்சந்தை மற்றும் ஏனைய பொதுச்சந்தைகள் மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டுள்ளன.

சந்தைகளில், சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூக இடைவெளியை பேணி வியாபார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சந்தைகளில் பொலிஸார், சுகாதாரப் பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# நல்லாட்சியின் கொள்கையை பரிசீலனை செய்யவேண்டும்

## ஜனாதிபதியிடம் மங்கள சமரவீர கோரிக்கை



கொழும்பு, ஜன. 19

**நல்லாட்சி அரசால் தொடங்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அவசியம் தொடர்பாக மங்கள சமரவீர வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

பெரும்பாலான அரசியல் தலைவர்கள், மக்களை ஏமாற்ற அவர்கள் பயன்படுத்திய அதே பொய்களால் இப்போது தாக்கப்படுகின்றார்கள்.

மேலும் நாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை கண்டு மகிழ்ச்சியாக இருக்க முடியாது.

இதேவேளை, இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்களை அணிதிரட்டுவது இன்று அவசியம்.

அத்துடன் இந்த புதிய முதலீடு, இன்று நாட்டின் பொருளாதார மையங்களில் ஒன்றான இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கை போன்ற ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின், முதலில் தேவையான பின்னணியைத் தயாரித்து, அதன் ஊடாக அதிக வெளிநாட்டு முதலீட்டாளர்களை நம் நாட்டிற்கு ஈர்க்கும் திட்டங்களினால் மாத்திரமே இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்.

இன்று வியட்நாம், கம்போடியா போன்ற சோசலிச நாடுகள்கூட ஒரு நாட்டை வளர்ப்பதில் வெளிநாட்டு முதலீட்டின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏராளமான சலுகைகளை வழங்குகின்றன.

மேலும், பெரும்பாலான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஒரு வெளிப்படையான சந்தைப் பொருளாதாரத்தை எதிர்பார்க்கிறார்கள்.

அந்தவகையில் இதுபோன்ற பொருளாதார கட்டமைப்பை கடந்த 2015 ஆம் ஆண்டில் எங்களது அரசாங்கம் எடுத்த முயற்சியின் காரணமாக, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு முதலீட்டாளர்களை எம்மால் ஈர்க்க முடிந்தது.

மேலும், முதலீட்டு நட்பு சூழல் குறியீட்டின் வளர்ச்சியால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க முடிந்தது. மேலும் வசதியாக புதிய விதிகளை உருவாக்க நாங்கள் தயாராக இருந்தோம்.

எனவே தற்போதைய சூழ்நிலையில், நல்லாட்சி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றேன்-என்றுள்ளது.

# அறிவுறுத்தலை மீறிய திரையரங்குக்கு சீல்!

யாழ்ப்பாணம், ஜன. 19

பருத்தித்துறையில் திரையரங்கு ஒன்று கொவிட் -19 சுகாதார கட்டுப்பாடுகளை மீறி இயங்கியதால் சுகாதாரத்துறையினரால் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் முன் அனுமதி பெறாமல் கொவிட் -19 சுகாதாரக் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காது இயங்கிய திரையரங்கே பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகரால் மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியில் இரண்டு கொரோனா தொற்றாளர்கள் அண்மையில் இனங்காணப்பட்டு, அவர்களுடன் நேரடித் தொடர்பைப் பேணிய இருபத்தைந்துக்கு மேற்பட்டவர்கள், அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆகவே அவர்களுக்கான பி.சி.ஆர். முடிவுகள் இன்னும் கிடைக்கப்பெறாத நிலையில் திரையரங்கை பருத்தித்துறையில் திறக்கவேண்டாம் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை பெற்று, பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியாலும் பொதுசுகாதாரப் பரிசோதகராலும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அந்த அறிவுறுத்தலை மீறி, அங்கு சமூக இடைவெளி பேணாமலும் முகக்கவசங்களை சரியாக அணியாமலும் பெருமளவானோர் ஆபத்தான நிலையில் ஒன்றுகூட இடமளிக்கப்பட்டுள்ளது.

அதனாலேயே திரையரங்கு சீல் வைக்கட்டு மூடப்பட்டதாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

# 183 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 19

வெளிநாடுகளில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் 183 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் 6 விமானங்கள் ஊடாக நாட்டை வந்தடைந்தனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

சவுதி அரேபியாவில் இருந்து 75 பேரும் சிங்கப்பூரில் இருந்து 67 பேரும் கட்டாரில் இருந்து 28 பேரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்குடுபடுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதேநேரம், இந்த காலப் பகுதியில் தொழில் நிமித்தம் 627 இலங்கையர்கள் 8 விமானங்களின் ஊடாக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

அவர்களில் அதிகமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

மலர்வு
25.10.1972





உதிர்வு
17.01.2021

### திருமதி சத்தியமூர்த்தி நந்தினி (கலா)

கைதடியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை 23.DR. EA கூரே மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியமூர்த்தி நந்தினி (கலா) அவர்கள் நேற்று (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகினார்.

அன்னார் திரு K.S பொன்னம்பலம் (உரிமையாளர் வெலிகம ஸ்ரோர்ஸ் கொழும்பு, எரிபொருள் நிரப்பு நிலையம் - கைதடி) காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், திரு திருமதி சுப்பையா தம்பதியினரின் அன்பு மருமகளும், திரு S.சத்தியமூர்த்தி (உரிமையாளர் கொழும்பு தர்சிகா யுவல்லர்ஸ், தேவிகா யுவல்லர்ஸ், கவினாஸ் யுவல்லர்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், நிலோஸ் (கபில் - டாக்டர் அவுஸ்திரேலியா), நிதுஜா (கபினா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி (அவுஸ்திரேலியா), வசந்தி (நியூஸிலாந்து), சுகந்தன் (எரிபொருள் நிரப்பு நிலையம் - கைதடி) ஆகியோரின் சகோதரியும், சிவசண்முகராசா, மோகன்ராஜ், உருத்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு மயானத்தில் நேற்று (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அன்னார் காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடனும், இன்று (19.01.2021) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து முற்பகல் 10 மணிவரை பிரார்த்தனை நடைபெறும் என்பதையும் அறியத்தருகிறோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **P.சுகந்தன்** (சகோதரன்)

கைதடி. 077 898 8836

# திருமணங்களை மண்டபங்களில் நடத்துவதற்கு வவுனியாவில் தடை

வவுனியா, ஜன. 19

வவுனியா மாவட்டத்தில் திருமண மண்டபங்களில் திருமணங்களை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பொதுச்சந்தைகளை மீள திறப்பதற்கும் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# பண்டிகைக் காலமும் பட்டாசின் ஆரவாரமும்

ஏதோ ஒரு நோக்கத்தினடிப்படையிலோ அல்லது சிந்தனையின் அடிப்படையிலோ கட்டமைக்கப்பட்ட கலாசார பண்பாட்டு நிகழ்வுகளானவை இன்று கேளிக்கை மற்றும் களியாட்ட செயற்பாடுகளால் தடம் புரண்டு திசைமாறிச் செல்வதனை கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

குறிப்பாக தமிழரெம் கலாசாரத்தையும் பண்பாட்டையும் விழுமியங்களையும் பறைசாற்றி நிற்கும் மங்கல மற்றும் அமங்கல நிகழ்வுகளானவை இன்று கேளிக்கை நிகழ்வுகளாக மாறி வருவது கவலைக்குரிய விடயமாகும்.

பண்டைய காலத்திலிருந்து குறிப்பிட்ட காலம்வரை பண்டிகைகளின் சிறு பாகங்களாக விளங்கிய உறியடித்தல், தலையணைச்சண்டை, வெடி வெடித்தலுடனான வான வேடிக்கைகள், குதிரையாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் போன்ற பல பாரம்பரிய நிகழ்வுகளில் பல வழக்கிழந்து வரும் அதேவேளை பண்டிகைகளின் சிறுபாகமாக விளங்கிய வெடி வெடித்தலுடனான வான வேடிக்கையின் முக்கியத்துவம் அதிகரிக்கும் அதேவேளை பண்டிகைக்கு வழங்கும் முக்கியத்துவம் குறைவடைவதும் , அந் நிகழ்வுகளால் விளம்பி நிற்கும் கலாசார மற்றும் விழுமியப் பண்புகளை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் ஊடகமான பண்டிகைகளின் தனித்துவம் மருவிச் செல்வதென்பது மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டிய விடயமாகும்.

### பட்டாசு வெடிப்பதிலும் இரண்டு பக்கங்கள்

அவ்வகையிலே இன்று சுப நிகழ்வுகளான பண்டிகைகள் , திருமண வைபவம் மற்றும் மரணச்சடங்கிலே பட்டாசு கொளுத்துவதென்பது முதலிடம் பெறுகின்றது. “பட்டாசு” என்ற ஒற்றை வார்த்தையை கேட்கும்போது அனைவர் மனதிலும் தோன்றுவது வண்ணமயமான ஜாலங்களும் பிரகாசமுமே. ஆனால் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் கொண்டாட வேண்டிய பண்டிகைகளும் , அமைதியாக நடத்தவேண்டிய மரணச் சடங்குளும் பட்டாசு வெடித்தலின் காரணமாகச் சலனம் நிறைந்த சூழலில் பல எதிர்மறை எண்ணங்களுடன் நடந்தேறுகின்றன என்பதை ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் சிந்திக்கத் தவறி சொற்ப சந்தோசத்தை அனுபவிக்கும் குறுகிய மனப்பான்மை படைத்தவர்களாக மாறி வருவது கவலைக்கிடமான விடயமாகும்.

ஒரு நாணயத்திற்கு எவ்வாறு இரண்டு பக்கங்கள் காணப்படுகின்றதோ அதே போலவே பட்டாசு வெடிப்பதிலும் இரண்டு பக்கங்கள் காணப்படுகின்றன. எனினும் பட்டாசு வெடிப்பதால் நேர்மறையான தாக்கத்தை விட எதிர்மறையான தாக்கமே அதிகளவில் காணப்படுகின்றது. அவ்வகையிலே சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்னைககள், உடலியல் மற்றும் உளவியல் தாக்கங்கள், சமூக அந்தஸ்துடன் கூடிய பொருளாதாரப் பிரச்னைகள், சுகாதாரப் பிரச்னைகள் என்ற வகையில் இத் தாக்கங்களைப் பார்க்கலாம்.

குறிப்பாக பண்டைய காலத்திலே சூழலாதிக்கவாதம் மேலோங்கி மனிதர்கள் அனைவரும் இயற்கைக்குக் கட்டுப்பட்டு இருந்தமையினால் இயற்கை அன்னை தனது வளங்களை அள்ளிக் கொடுத்தமையினால் மக்கள் மகிழ்ச்சியானதும் அமைதியானதுமான உன்னதமான வாழ்க்கையினை வாழ்ந்தனர். ஆனால் இன்றைய நவீன யுகத்திலே சூழல் ஆதிக்க வாதத்தைவிட மானிட ஆதிக்க வாதத்தின் தாக்கம் மேலோங்கிக் காணப்படுகின்றது. இதனால் மனிதன் இயற்கையை வெல்ல முற்படும்போது இயற்கையும் சீற்றம் கொண்டு தன் சீற்றத்தை வெள்ளப்பெருக்கு, எரிமலை வெடித்தல், சூறாவளி, வெப்பமயமாதல் போன்ற பல வடிவங்களில் வெளிப்படுத்துகின்றது.

இதனால் சூழல் மாசடைவு உட்பட பல தாக்கங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் காரணங்கள் பல காணப்பட்டாலும் பட்டாசு வெடிப்பதும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

### பொது இடங்களில் வெடி வெடித்தல்

ஆரம்ப காலங்களில் நிகழ்வுகளில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பட்டாசு வெடிக்கப்பட்டது. உதாரணமாக தைப்பொங்கல் பண்டிகையில் பால் பொங்கிவரும்போது மட்டுமே வீட்டில் வெடி வெடித்தனர். இதனை “தைத் திருநாள் இல்லமெல்லாம் தளிர்த்திடும் தைப்பொங்கல்” எனும் பாடலில் “ வெண்ணிறப்பால் பொங்கி வர வெடி சுடுவோம் நாங்கள்” எனும் பாடல் அடியானது ஒரு நேரத்தில் மட்டும் வெடி வெடித்தமையைக் காட்டுகின்றது. ஆனால் இன்று பண்டிகை ஆரம்பிப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் இருந்து பண்டிகை முடிவடைந்த பின்னரும் வீடுகளில் மட்டுமல்லாது வீதிகள், பாடசாலைகள் , பணியிடங்கள் மற்றும் பொது இடங்களில் வெடி வெடித்தல் நாகரிகமாக மாறியது மட்டுமல்லாது அளவோடு வெடிக்கப்பட்ட வெடிகளானவை இன்று நூறுகள் ஆயிரங்களைத் தாண்டிச் செல்கின்றது.

அந்த வகையில் நிலம், நீர், வளி, உயிரியல் ஆகிய நான்கு வகைச் சூழலும் மாசடைகின்றது. குறிப்பாக வெடி பொருட்களில் காணப்படும் அலுமினியம், சல்பர், பேரியம் (Barium), பொட்டாசியம், பெர்க்ளோரேட் (Perchlorate) என்பனவும் வெடி பொருள் ஆக்கப் பயன்படும் ஏனைய மக்காத கூறுகளும் நிலம் , நீரினை சேர்வதனால் நிலவாழ் அங்கிகளுடன் கூடிய நிலச்சூழலும் நீர்வாழ் அங்கிகளுடன் கூடிய நீர்ச்சூழலும் நிலத்தடி நீரும் மாசுபடுவதனால் எதிர்காலத்தில் தண்ணீர் மாசடைந்து தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதுடன், விவசாயமும் பாதிப்படையும்.

### உயிரினங்கள் அழிவடையும்

மேலும் பட்டாசுகள் மிக உயர்ந்த அளவிலான ஒலியினை உருவாக்குவதனால் மனிதனது கேட்கும் திறன் 85 டெசிபலாக உள்ள போது பட்டாசுகள் 140 டெசிபலினை விட அதிகளவிலான ஒலியினை ஏற்படுத்துவதனால் இவ் ஒலிகள் கேட்கும் திறனில் இயலாமையினை உருவாக்கி காதுகள் நிரந்தர செவிடாதலுக்கு உட்படும் நிலையினைக் காணலாம். இவற்றோடு உயிரினச் சூழலினை நோக்குவோமாயின் மனிதன் உட்பட அனைத்து உயிரினப் பல்வகமையின் சமநிலை சீர் கெடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக ஒரு விலங்கினத்தினதோ அல்லது பறவையினத்தினதோ இருப்பிடத்திலோ அல்லது அவை செல்லும் போக்கிடத்திலோ வெடி வெடிப்பதனால் அவற்றின் வாழ்க்கைக் கட்டமைப்பு மாற்றமடையும். இதனால் மகரந்த சேர்க்கையிலிருந்து இனப் பெருக்கம் மற்றும் உணவுச் சங்கிலியென அனைத்து விதமான செயற்பாடுகளும் பாதிப்படைவதனால் பல அரிய வகை உயிரினங்கள் அழிவடைவது மட்டுமல்லாது எதிர்காலத்தில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டு பஞ்சம் நிலவக் கூடிய நிலை காணப்படுகின்றது.

அத்தோடு பட்டாசு எரியும்போது தீ விபத்து ஏற்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. உதாரணமாக 2019 ஜனவரி புத்தாண்டு அன்று ஒவர்பேக் கடற்கரையில் ஒருவர் எரிந்து இறந்ததுடன் மூவர் காயமடைந்தனர். மேலும் பட்டாசு எரியும்போது அதிகப் படியான உலோகத் துகள்கள், கந்தகக் கலவை, கன உலோகம், சல்பர் ஒக்சைட் உட்பட பல இரசாயனத் துகள்கள் வெளிவருவதனால் வீதியெங்கிலும் பனிமூட்டமான புகை மூட்டம் உருவாகுவதனால் வாகன நெரிசல் ஏற்பட்டு வீதி விபத்துக்கள் ஏற்பட வழிவகுக்கின்றன.

### சூழல் மாசடையும் நிலை

கடந்த சில வருடங்களில் இந்தியாவின் டெல்லி மற்றும் சீனாவின் பீஜிங்கில் பட்டாசுப் புகையால் ஏற்பட்ட பாரிய சிக்கலால் இவ்விரு நாடுகளிலும் வெடி வெடிப்பதற்கு கட்டுப்பாடுகள் போடப்பட்டமையினை அவதானிக்கலாம். அவற்றோடு இப் புகையினால் வளி மாசடைவதனால் சுவாசம் தொடர்பான நோய்கள், தோல் நோய்கள் போன்றன ஏற்படுவது மட்டுமல்லாது தற்போது பெருகி வரும் கொரோனா வைரஸ் அதிகமாக பரவ வாய்ப்பு ஏற்படுவதாக ஆய்வாளர்கள் கூறுவதனை கவனத்தில் எடுக்க வேண்டிய கட்டாயமான சூழலில் நாம் அனைவரும் உள்ளோம்.

மேலும் சமூகத்திலே அடி மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை பல தரப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அவ்வகையில் பட்டாசு வாங்கும் போதும் தத்தமது அந்தஸ்திற்கேற்ப பட்டாசினைக் கொளுத்தும் போதும் சமூக ஏற்றத் தாழ்வு ஏற்படுவது மட்டுமல்லாது பட்டாசினை வாங்க முடியாதவர்கள் கடன் பெற்றுப் பட்டாசினை வாங்குவதனால் சமூகத்தில் முரண்பாடுகள் தோன்ற வழிவகுக்கின்றன. இதைவிட இவ்வுலகில் எத்தனையோ உயிரினங்கள் ஒரு நேர உணவிற்குக் கூட கஸ்ரப்படும்போது அதிகரித்து வரும் ஆடம்பரச் செலவான வெடி வெடிப்பதற்கு செலவிடும் செலவினைக் குறைத்து வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு உதவுவதன் மூலம் ஒவ்வொருவரும் தத்தமது நாட்டின் வறுமை வீதத்தைக் குறைத்து பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்க முடியும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பட்டாசு வெடிப்பதனால் அனைத்து உயிரினங்களும் உடலியல் மற்றும் உளவியல் தாக்கத்திற்கு உட்படுகின்றன. குறிப்பாக வெடி வெடிக்கும்போது அவை உயிரினங்களில் அவயவங்களில் படுவதனால் குருடாதல், செவிடாதல், அவயவ இழப்பு, இறப்பு நிகழ்வதுடன் சுவாசம் தொடர்பான நோய்கள், இதய நோய்கள், தோல் நோய்கள், மாரடைப்பு போன்ற பல நோய்கள் ஏற்பட வழிவகுக்கின்றது. உளவியல் தாக்கம் எனும் போது நேரகாலமில்லாமல் காணுமிடமெங்கிலும் வெடி வெடிப்பதனால் அனைத்து உயிரினங்களினதும் தூங்கும் உரிமை மறுக்கப்படுகின்றது. இதனால் அதிர்ச்சி , பயம் போன்ற மனத்தாக்கத்துடனான உணர்வுகள் மேலோங்குவதனால் மன அழுத்தம் ஏற்படு



கின்றது. குழந்தைகள், பறவைகள், விலங்குகள், நோயாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்களின் இறப்பும் நிகழ்ந்தமையினையும் அறிய முடிகின்றது.

### குறுகிய நேர மகிழ்ச்சி

எது எவ்வாறாயினும் பட்டாசு வெடித்தலானது ஒரு சிலருக்கு குறுகிய நேர மகிழ்ச்சியினையும் குதூகலத்தினையும் இளம் தலைமுறையினருக்கு வழங்கினாலும் பலருக்கு அது அவர்களது வாழ்க்கையினை அமைதியான முறையில் கொண்டு செல்வதற்கு இடையூறாகவே காணப்படுகின்றது. இன்று இளம் தலைமுறையில் இருப்பவர்கள் தாமும் இன்னும் சொற்ப காலத்தில் முதுமையை அடைந்து அக் கஸ்டத்தை அனுபவிக்கப் போகின்றோம் என்பதனை மறந்து விடுகின்றனர். அதற்காக பட்டாசே வெடிக்கக்கூடாது எனக் கூறவில்லை எதைச் செய்தாலும் அளவோடு செய்ய வேண்டும் எனக் கூறும் போது “ அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு” என்ற பழமொழி நினைவிற்கு வருகின்றது.

எனவே வீதியோரங்களிலும், உயிரின வாழிடங்களிலும் பட்டாசினைக் கொளுத்தாமலும், ஏனைய உயிரினங்களின் அமைதியினைக் குலைக்காமலும், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் வெடி கொளுத்துவதைத் தவிர்த்தும் அளவோடு பட்டாசினை வெடித்து மனிதர்கள் மட்டும் அமைதியான வாழ்க்கையை வாழாது உலகிலே வாழும் அனைத்து உயிரினங்கள் மற்றும் சூழலின் சமநிலையினைப் பேணவேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

### வாழ்க்கை வாழ்வதற்கே

வரையறுக்கப்பட்ட குறுகிய வாழ்க்கையிலே “வாழ்க்கை என்பது வாழ்வதற்கே” என்பதனைக் கருத்தில் கொண்டும் “சுதந்திரம் என்பது எமக்கு முன்னால் உள்ளவரின் மூக்குநுனி வரையுமே” எனும் கோட்பாட்டினைப் பின்பற்றுவதுடன் மானிடாதிக்கத்தின் போக்கினைக் குறைத்து சூழலுக்குக் கட்டுப்பட்டு இயற்கையோடு ஒன்றிணைந்து எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை வழங்குவதுடன், ஒவ்வொருவரும் தத்தமது கலாசாரம் பண்பாடு மற்றும் விழுமியங்களை பேணிப் பாதுகாத்து அச் சொத்துக்களை எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்குவோமாக.

**மருத்துவர் த.சத்தியமூர்த்தி,**
**பணிப்பாளர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை**






# இந்தியாவின் தலையீட்டை அடுத்து மீளமைக்கப்படும் நினைவுத் தூபி!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி மிக இரகசியமாக இடித்தழிக்கப்பட்டமை குறித்து எழுந்த எதிர்ப்பலைகளுகளுக்கு மத்தியில் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு இந்தியா தனது கரிசனையை வெளிப்படுத்திய பின்னரே நிலைமையைச் சமாளிக்கும் வகையில் தூபி மீளமைக்கப்படுவதாக தி இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்ட மறுநாள் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவைச் சந்தித்துத் தனது கவலையை வெளியிட்டார்.

இலங்கை உள்நாட்டு விவகாரங்களில் இந்தியாவின் தலையீடு குறித்த கொழும்பின் முணுமுணுப்புக்களுக்கு மத்தியில் இந்தச் சந்திப்பு குறித்த தகவல்கள் உடனடியாக பகிரங்கப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் யாழ்.பல்கலைக்கழக நினைவுத் தூபி இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவைச் சந்தித்துத் விவாதித்ததை பிரதமர் மகிந்தவின் ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட ஞாயிற்றுக் கிழமை தி இந்துவிடம் உறுதி செய்தார்.

போரில் கொல்லப்பட்ட மக்கள் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை கடும் எதிர்ப்பலைகளைத் தூண்டி, இலங்கை அரசுக் எதிராக கடும் கண்டனங்கள் வெளியான நிலையிலேயே திடீரென குத்துக்கரணம் அடித்து இடிக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு மீண்டும் அடிக்கல் நாட்டப்போவதாக திங்கட்கிழமை அதிகாலையிலேயே துணைவேந்தர் அறிவித்தார்.

பாதுகாப்புத் துறையில், புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட பல தரப்புக்களின் கடும் அழுத்தங்களால் தான் நினைவுத் தூபியை அகற்றியதாக துணைவேந்தர் சிறீசற்குணராஜா தெரிவித்தார்.

ஆனால் இதற்கு கடும் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன. தமிழகத்தில் கொந்தழிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நிலைமையைத் தணிக்க நினைவுத் தூபியை மீள அமைக்க அடிக்கல் நாட்டுவதாக அவர் கூறினார்.



இந்நிலையில் பிரதமர் மஹிந்தவைச் சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர், தமிழக முதலமைச்சர், எதிர்க்கட்சிகள் இந்த நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்துள்ளன. அங்கு பெரும் கொதிப்பலை எழுந்துள்ளது. எனவே, பதற்றத்தை தணிக்க உடனடியாகச் செயற்படுமாறு மகிந்தவை கேட்டுக்கொண்டதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த அழுத்தங்களை அடுத்தே இந்த விடயத்தில் தலையிட்ட பிரதமர் மஹிந்த, இடிக்கப்பட்ட நினைவுத் தூபியை மீள அமைக்கும் நடவடிக்கைக்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாக தி இந்து தெரிவித்துள்ளது.

இதேவேளை, அமைக்கப்படவுள்ள நினைவுச் சின்னம் அமைதியின் சின்னமாக இருக்கும் என யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா தெரிவித்ததாக தி இந்து குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தூபி மீளமைப்பு குறித்து ஆராய மாணவர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்துள்ளதாகவும் பேராசிரியர் சிறீசற்குணராஜா தி இந்துவிடம் கூறியுள்ளார்.

- நன்றி: தி இந்து

**“பிரதமர் மஹிந்தவைச் சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர், தமிழக முதலமைச்சர், எதிர்க்கட்சிகள் இந்த நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்துள்ளன. அங்கு பெரும் கொதிப்பலை எழுந்துள்ளது. எனவே, பதற் றத்தை தணிக்க உடனடியாகச் செயற்படுமாறு மகிந்தவை கேட்டுக் கொண்டதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.”**



# ராஜித எம்.பிக்கு எதிராக நேற்றுக் குற்றப்பத்திரிகை



**கொழும்பு,ஜன.19**

**முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகம் தொடர்பில் 2014 ஆம் ஆண்டு விலை மனுக்கோரப்பட்டமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் போது முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தை குத்தகைக்கு விட்டமை மூலம் அரசாங்கத்துக்கு இழப்பை ஏற்படுத்தியதாக இந்த மூவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் ஏனைய இருவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகளின் கைரேகைகளைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதுடன் இந்த வழக்கை ஏப்ரல் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாகவும் அறிவித்துள்ளார். (எ)

# போதைப்பொருள் வர்த்தகத்துக்கு உதவி; குற்றத்தடுப்பு பொலிஸ் பரிசோதகர் கைது

கொழும்பு,ஜன.19

போதைப்பொருள் கடத்தல், வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அநுராதபுரம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் அநுராதபுரம் பொலிஸாரால் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் சிறப்பு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகரிடமிருந்து 5 தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான பகுப்பாய்வு நடவடிக்கைகளின் போது வெளிப்பட்ட தகவல்களுக்கமைய பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பொலிஸ் பரிசோதகர் 43 வயதுடையவர் எனத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், சந்தேக நபரை 7 நாள்கள் அநுராதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரின் பொறுப்பில் தடுத்து வைத்து விசாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)



# வவுனியா நகரின் நேற்று பல பகுதிகள் விடுவிப்பு

வவுனியா,ஜன.19

வவுனியாவில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் அதிகரித்த நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பல பகுதிகள் நேற்றுத் திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளன.

வவுனியா பட்டாணிச்சூரைச் சேர்ந்த கர்ப்பவதிப் பெண் மற்றும் பல்கலைக்கழக மாணவன் ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்தக் கிராமம் கடந்த 04 ஆம் திகதி முடக்கப்பட்டிருந்தது. இதேபோன்று வவுனியா நகர்ப்பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துவந்த நிலையில் பிரதான நகரம் உட்பட்ட 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் கடந்த ஒருவாரமாக அமுல்படுத்தப்பட்டிருந்தது.

அவற்றில் பஸார்வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தைவீதி, கந்தசாமிகோவில் வீதி, மில் வீதி, சூசைப்பிள்ளையார்குளம் வீதிகள் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பகுதிகள் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்கள் மற்றும் தினச்சந்தை ஆகியன திறக்கப்படாத நிலையில் இந்த வீதியால் பொதுமக்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நகரின் பல பகுதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் காலையிலேயே அதிக பொதுமக்கள் பல்வேறு தேவைகள் நிமித்தம் நகருக்குள் வருகை தந்துள்ளமையை அவதானிக்க முடிவதுடன் அநேகமான பாடசாலைகளில் மாணவர் வரவு மிகவும் குறைவாகக் காணப்பட்டது எனத் தெரியவருகிறது. (எ)

# நுவரெலியா- கந்தப்பளை பகுதியில் போராட்டம் 2 தோட்டங்களில் பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பம்

நுவரெலியா,ஜன.19

நுவரெலியா - கந்தப்பளை பார்க் தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ந்து அமைதியின்மை நிலவி வருகின்றது.

பார்க் தோட்ட முகாமையாளர் பெருந்தோட்டத் தொழிலாளர்களையும், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஷ்வரனையும் தகாத வார்த்தைகளால் பேசிய சம்பவத்தை அடுத்தே,இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 07 மணி முதல் தொடர்ந்து அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

தோட்ட முகாமையாளரின் வீட்டை முற்றுகையிட்டுள்ள பொதுமக்கள், முகாமையாளர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நுவரெலியா மாவட்டத்தின் இரண்டு பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பார்க் தோட்டத்தின் மூன்று பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும், கொங்கொடியா தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் இவ்வாறு பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் தொடர்ந்து அமைதியின்மை நிலவி வருகின்றமையால் சம்பவ இடத்தில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.






பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான காணிகளை ஒதுக்கீடு செய்யும் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

கந்தப்பளை பார்க் தோட்டத்தில் 305 வீடுகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் காணிகளை வழங்கத் தோட்ட முகாமையாளர் இழுத்தடிப்புக்களை மேற்கொண்ட நிலையில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ்வரன் அங்கு சென்றுள்ளார்.

இதன்போது தோட்ட முகாமையாளர் பெருந்தோட்ட மக்களைத் தரக்குறைவாக பேசியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களை தரக்குறைவாக பேசிய முகாமையாளர் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும், வீடுகளை அமைக்க காணிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும் கோரி அங்கு மக்கள் கோஷங்களை எழுப்பி வருகின்றனர். (எ)

# அளுத்கம பொலிஸ் நிலையத்தில் ஐந்து அதிகாரிகளுக்கு கொரோனா

கொழும்பு,ஜன.19

அளுத்கம பொலிஸ் நிலையத்தில் 5 அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அவர்களுடன் தொடர்பிலிருந்த 12 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் கம்புறுபிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் பணியாற்றிய 65 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (எ)

# உக்ரைன் சுற்றுலா பயணிகளால் 42 மில்லியன் ரூபா வருமானம்

கொழும்பு,ஜன.19



உக்ரைன் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் இலங்கை சுற்றுலாத்துறைக்கு 42 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# 100 பேருக்கு பரிசோதனை மூவருக்கு தொற்று உறுதி

மட்டக்களப்பு,ஜன.19

தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு நகர் அரசடி கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று 100 பேருக்கு மேற்கொண்ட அன்றிஜென் பரிசோதனையில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மூர் வீதியில் உயிரிழந்த 79 வயது முதியவர் ஒருவருக்கு மேற்கொண்ட அன்றிஜென் பரிசோதனையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டதையடுத்து அந்தக் கிராம உத்தியோகத்தர் பிரிவு முடக்கப்பட்டதுடன் உயிரிழந்த நபரின் வீட்டில் உள்ளவர்களுக்கு மேற்கொண்ட பரிசோதனையில் 05 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்றுத் திங்கள்கிழமை இந்தப் பகுதியைச் சோந்த 100 பேருக்கு மாநகர சபை பொதுச் சந்தைப் பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அன்றிஜென் பரிசோதனையில் புதிதாக 03 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது- என்றார். (எ)

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 649 பேர் குணமடைவு

கொழும்பு,ஜன.19

நாட்டில் நேற்று மேலும் 649 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 45 ஆயிரத்து 820 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, 53 ஆயிரத்து 76 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதில் 6992 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 717 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர்.

இதேவேளை நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான 260 இற்கும் மேற்பட்டோர் பேர் உயிரிழந்தனர். (எ)

## தவிசாளரானார் சர்வானந்தன்

# செங்கலடி பிரதேச சபை கூட்டமைப்பு வசமானது



**மட்டக்களப்பு,ஜன.19**

**மட்டக்களப்பு - ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் தவிசாளராக சின்னத்துரை சர்வானந்தன் ஆறு மேலதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார்.**

புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ந.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

31 பிரதேச சபை உறுப்பினர்களைக் கொண்ட இந்த பிரதேச சபையில் ஏற்கனவே தவிசாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ந.கதிர்வேல் பதவி வகித்தார்.

இந்நிலையில் 2021 ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் இரண்டு தடவைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டமையால் உள்ளூராட்சி சபைகள் சட்டத்தின் பிரகாரம் தவிசாளர் பதவி வறிதாக்கப்பட்டது.

புதிய தவிசாளரைத் தெரிவு செய்ய பகிரங்க வாக்கெடுப்புக்கு விடுவதா? இரகசிய வாக்கெடுப்புக்கு விடுவதா? என்பது தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் உறுப்பினர்களிடம் கோரப்பட்டது. இதற்குப் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரியிருந்தனர்.

இதன்போது தவிசாளராக போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச உறுப்பினர் சி.சர்வானந்தனை, வ.சந்திரவர்மன் (த.தே.கூ) முன்மொழிய (த.தே.கூ) உறுப்பினர் சி.சிவானந்தன் வழிமொழிந்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ந.திருநாவுக்கரசுவை, நா.மோகன்ராஜ் (த.ம.வி.பு) முன்மொழிய, உறுப்பினர் க.லோகிதராஜா (த.ம.வி.பு) வழிமொழிந்தார்.

வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போட்டியாளர் சி.சர்வானந்தனுக்கு ஆதரவாக த.தே.கூ- 07 , ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி -06, ஐ.தே.க -03, தமிழர் விடுதலைக் கூட்டணி -01 ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 17 உறுப்பினர்களும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் போட்டியாளர் ந.திருநாவுக்கரசுக்கு ஆதரவாக த.ம.வி.பு - 08, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - 01, ஐ.தே.க - 01, ஐக்கிய சமாதான கூட்டமைப்பு - 01 ஆகிய கட்சிகள் சார்பாக 11 உறுப்பினர்களின் வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. மற்றும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மற்றும் ஜனநாயக தேசிய இயக்கம் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஆகிய இருவரும் நடுநிலை வகித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரொருவர் சபைக்குச் சமுகமளிக்கவில்லை. இந்நிலையில் 06 மேலதிக வாக்குகளால் சி.சிவானந்தன்(த.தே.கூ) தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கு.ஹிரிதரன் ஆகியோர் சபைக்குள் பிரசன்னமாகியிருந்தனர். (எ)

# உடல்கள் தகனம் செய்யப்படுவது குறித்து இஸ்லாமியர்களே கவலைப்பட வேண்டாம்

## பொஹவந்தலாவ இராகுல தேரர் அறிவுரை

அம்பாறை,ஜன.19

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்துவிட்டார்கள் என்று இஸ்லாமிய நண்பர்கள் கவலைப்பட வேண்டாம். இந்நிலை தொடரப்போவதில்லை. கொடிய கொரோனா விஷக் கிருமி முடிவுக்கு வந்த பிறகு உடல்களை உங்கள் மார்க்கப்படியே இந்த மண்ணில் புதைக்கலாம். இயற்கை மனிதனுக்கு கொடுத்த முதலாவது தண்டனை சுனாமி, இரண்டாவது தண்டனை கொரோனா விஷக் கிருமியாகும்.

கொடிய கொரோனா இந்த உலகத்தை விட்டு நீங்குவதற்கு எல்லாப் பிரார்த்தனைகளையும் செய்வோம் என சர்வமத நல்லிணக்கத்துக்கான பிரதிநிதி மற்றும் தமிழ்மொழி உள்ளிட்ட பன்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர் என அழைக்கப்படும் பொஹவந்தலாவ இராகுல தேரர் தெரிவித்தார்.

ஐக்கியம், சமாதானம், சாந்தி ஆகியவற்றை இந்நாட்டு மக்களிடையே நிலைநாட்டுகின்ற வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடங்கலாக நாட்டின் அனைத்து இடங்களுக்கும் தர்ம விஜயம் மேற்கொள்கின்ற இராகுல தேரர், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்த பின்னர் நேற்று முன்தினம் அம்பாறை ஊடக மையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது நாட்டில் கடந்த 80 வருடங்களாக பல பிரச்னைகள் இருந்து வருகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வுகள் காணப்படல் வேண்டும். மொழிப் பிரச்னையே இவற்றுக்கெல்லாம் அடிப்படையான பிரச்னையாகும். பல நாடுகளில் பல மொழிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் பல கோடி மக்கள் வாழ்கின்றனர்.

ஆனால். இரு மொழிகள் காணப்படுகின்ற எமது நாட்டில் நாம் இரு மொழிகளையும் கற்றுக் கொண்டு புரிந்துணர்வோடு வாழா விட்டால் என்ன பயன்? தமிழ் இளையோர்கள் சிங்களத்தையும் சிங்கள இளையோர்கள் தமிழையும் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு தாயின் குழந்தைகளாக வெளிநாடுகளில் உள்ள நன்மைகளையும் பெற்றுக் கொண்டவர்களாக நாம் இந்நாட்டில் வாழ முடியும்.

சமயங்களுக்கு அப்பால் நாம் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபட்டு நிற்க வேண்டும். நான் பகவத்கீதை, திருக்குர்ஆன் ஆகிய புனித நூல்களையும் கற்றிருக்கின்றேன். இறந்த பின்னர் ஜனாஸாவை எரிக்கக் கூடாது புதைக்க வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு அவர்களுடைய மார்க்கம் சொல்லிக் கொடுக்கின்றது.

அதை அவர்கள் பின்பற்றுகின்றனர். இருந்தாலும் நாம் எமது சுகாதாரத்தைப் பற்றி இப்போது சிந்திக்க வேண்டிய கால கட்டத்தில் இருக்கின்றோம். உலக சுகாதாரமும் எமது நாட்டு சுகாதாரமும் என்ன சொல்கின்றனவோ அதன்படி வாழ வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கின்றது.

மேலும், புதைக்கலாம் என்று சுகாதாரம் கூறினால் நாட்டிலே உயர் பதவிகளில் இருக்கக் கூடியவர்கள் இந்நாட்டு மக்களுக்கு சரியான முறைகளில் அதற்கான வழிகளை செய்து கொடுக்க வேண்டும்.

புதைத்தால் விஷக் கிருமிகள் அதிகரிக்கும் எரித்துதான் ஆக வேண்டும் என்று உலக சுகாதாரம் கூறினால் அதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். காரணம் இறந்தவர்களைப் பற்றிச் சிந்திப்பதை விட வாழ்கின்ற மற்ற மக்களைப் பற்றி யோசிக்க வேண்டி இருக்கின்றது. அவ்வாறு யோசித்து செயல்படுகின்ற போது இஸ்லாமியர்களுக்கு இன்னமும் கூடுதலான கௌரவத்தையும் மரியாதையையும் அது ஏற்படுத்தும்.

ஆனால் ஜனாஸாக்களை எரித்து விட்டார்கள் என்று இஸ்லாமிய நண்பர்கள் கவலைப்படவே வேண்டாம். இந்நிலை தொடரப் போவதில்லை. கொடிய கொரோனா விஷக் கிருமி முடிவுக்கு வந்த பிறகு ஜனாஸாவை உங்கள் மார்க்கப்படியே இந்த மண்ணில் புதைக்கலாம்- என்றார். (எ)






பதவியேற்க வரும் பைடன், கமலாவுக்கு

# அமெரிக்காவில் கோலமிட்டு வரவேற்பு

வாஷிங்டன், ஜன. 19

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவான ஜோ பைடனின் பதவியேற்பை வரவேற்று அமெரிக்கர்கள் தமிழர்களின் பாரம்பரியத்தை பின்பற்றி கோலமிட்டு வருகின்றனர்.

வரவேற்பின் அடையாளமாக வீடுகளின் வாசல்களில் இடப்படும் தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவமான கோலம், அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் ஓர் அங்கமாக மாறி இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவான ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள பூர்வீக தமிழரான கமலா ஹரிஸ் ஆகிய இருவரும் நாளை பதவி ஏற்கின்றனர்.

இந்த வரலாற்று நிகழ்வை கொண்டாட ஆயிரக்கணக்கான கோலங்களை உருவாக்கும் ஒன்லைன் முயற்சியில் அமெரிக்கா முழுவதிலும் இருந்து 1,800 இற்கும் மேற்பட்ட நபர்களும், இந்தியாவில் இருந்து பலரும் பங்கேற்றனர்.

புதிய நிர்வாகத்துக்கு நல்ல தொடக்கத்தின் அடையாளமாக நாடு முழுவதும் இருந்து வரும் கோலங்களை வெள்ளை மாளிகையின் முன் காட்சிப்படுத்த முதலில் திட்டமிடப்பட்டது. வாஷிங்டன் பொலிஸார் இதற்கு அனுமதியும் வழங்கினர்.

இருப்பினும், வாஷிங்டனில் எதிர்பாராத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதால் இந்த அனுமதி ரத்து செய்யப்பட்டது. இதனால் இதன் விளைவாக, பைடன் மற்றும் ஹரிஸை 'அனைவருக்குமான ஜனாதிபதி' என்ற மனப்பான்மையுடன் வரவேற்கவும், அமெரிக்காவின் பல கலாசார பாரம்பரியத்தை வெளிப்படுத்தவும், நேற்று முன்தினம் கோலங்கள் போடப்பட்ட ஆயிரக்கணக்கான கோல ஓடுகளின் படங் கள் ஒரு காணொலியாக உருவாக்கப்பட்டது. (ஐ)

# வுஹான் ஆய்வுகூட பணியாளரே முதல் தொற்றுக்கு இலக்காகினர்?

## அமெரிக்கா உளவுத் தகவல்

வாஷிங்டன், ஜன. 19

"சீனாவில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்குவதற்கு முன்பாக அங்குள்ள வுஹான் நகரில் இயங்கும் சர்ச்சைக்குரிய வைரஸ் நுண்கிருமி ஆய்வு கூடத்தின் பணியாளர்கள் சிலர் கடந்த, 2019 ஆம் ஆண்டு இலையுதிர் காலப்பகுதியில் தொற்று நோய் அறிகுறிகளுக்கு உள்ளாகினர் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

"சிவில் தேவைகளுக்கான ஆய்வுகளை நடத்துகின்ற அந்த சோதனைக்கூடத்தில் சீன இராணுவத்துடன் தொடர்புடைய பரிசோதனைகளும் மிக இரகசியமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.",

தனது உளவுப் பிரிவை ஆதாரம் காட்டி அமெரிக்க ராஜாங்க அமைச்சு ஓர் அறிக்கையில் இத்தகவல்களை வெளியிட்டிருக்கிறது.

ஓரிரு தினங்களில் பதவி விலக இருக்கும் ட்ரம்ப் நிர்வாகத்தின் இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோ வைரஸ் விவகாரத்தில் சீனா மீது தொடர்ச்சியாக நடத்துவந்த தாக்குதல்களின் இறுதியாக

இந்த அறிக்கை வெளிவந்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் நிபுணர்கள் சீனாவில் தங்கியிருந்து தங்கள் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்ற வேளையில் வுஹான் ஆய்வு கூடத்துடன் தொடர்புடைய இந்த செய்திகள் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

உலகில் இதுவரை இரண்டு மில்லியன் பேரை கொன்றுள்ள கொரோனா வைரஸ் முதலில் சீனாவின் வுஹான் நகர விலங்கு இறைச்சிச் சந்தை ஒன்றில் இருந்து காட்டு விலங்குகள் ஊடாக மனிதனுக்குப் பரவியது என்றும் இல்லை அது அங்குள்ள ஆய்வகத்தில் இருந்து தான் வெளியே கசிந்தது என்றும் இரண்டு விதமான சந்தேகங்கள் நீடித்து வருகின்றன.

வைரஸ் முதலில் எங்கிருந்து, எப்படி மனிதரில் பரவியது என்பது தொடர்பாக விசாரித்து அறிக்கை தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சுகாதார அமைப்பின் நிபுணர்கள் குழு ஒன்றை நீண்ட இழுபறிக்குப் பிறகு நாட்டுக்குள் அனுமதித்திருக்கிறது சீனா.

பத்து சர்வதேச நிபுணர்கள் அடங்கிய அக்குழுவினர்



அங்கு விசாரணைகளை தொடக்கி உள்ளனர்.

இதேவேளை, குகை ஒன்றில் கொரோனா வைரஸ் மாதிரிகளைச் சேகரிக்கும் சமயத்தில் வுஹான் ஆய்வுக்கூட விஞ்ஞானிகள் உயிருள்ள வௌவால்களை போதிய பாதுகாப்பு இன்றிக் கையாள்வதைக் காட்டும் காணொலி ஒன்றும் வெளியாகி இருக்கிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட அந்த காணொலியில் வௌவாலின் கூரிய பல் பிளாஸ்ரிக் கையுறை ஊடாகத் தனது கையில் ஊசி போலக் குத்தியது என்று விஞ்ஞானி ஒருவர் கூறுகின்றார்.

மற்றொரு விஞ்ஞானி தனது வெறுங்கையில் வௌவால் ஒன்றைப் பற்றி வைத்திருக்கின்ற காட்சியும் அதில் இடம்பெற்றுள்ளது.

உலகில் பரவுவதற்கு முன்பாகவே வுஹான் ஆய்வக விஞ்ஞானிகள் வைரஸ் தொற்றுகளுக்கு ஆளாகி இருக்கலாம் என்பதை அந்தக் காணொலி உறுதிப்படுத்துவதாக ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

உலகைப் புரட்டிப் போட்டிருக்கும் கொரோனா வைரஸ் பரவலுக்கு யார் மீது பொறுப்புச் சுமத்துவது என்ற "பூகோள சண்டையில்" மீண்டும் வுஹான் நுண்கிருமி ஆய்வுக்கூடம் சிக்கியிருப்பதை இந்த செய்திகள் காட்டுகின்றன.

# பெண் நீதிபதிகள் சுட்டுக்கொலை: ஆப்கான் தலைநகரில் பயங்கரம்!

காபூல், ஜன. 19

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அடையாளம் தெரியாத ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு பெண் நீதிபதிகள் பலியாகினர்.

இது குறித்து ஆப்கான் ஊடகங்கள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:

தலிபான்களுடன் அமைதி பேச்சு நடக்கும் நிலையில், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் ஞாயிற்றுக்கிழமை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிசூட்டில் உயர்நீதிமன்றத்தின் பெண் நீதிபதிகள் இருவர் பலியாகினர். இதில் அவர்களின் வாகன சாரதிகள் காயமடைந்தனர்.

பெண் நீதிபதிகள் கொல்லப்பட்டமை நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் இதனை தலிபான்கள் நடத்தி இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.



# இந்தோனேசிய நிலநடுக்கம்: உயிரிழப்பு 96ஆக அதிகரிப்பு

## 70,000 பேர் இடப்பெயர்வு

ஜகார்த்தா, ஜன. 19

இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்துக்கு 96 பேர் பலியாகினர். 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தோனேசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 6.2. ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. நாட்டின் சுலவேசி தீவில் மாமுஜூ மற்றும் அயல் மாவட்டமான மஜெகே ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் வீடுகளும், கட்டடங்களும் இடிந்து விழுந்தன.

இந்த நிலநடுக்கத்தில் இதுவரை 96 பேர் பலியாகி உள்ளனர். 70,000க்கும் அதிகமானவர்கள் இடம் பெயர்ந்து 23இற்கும் மேற்பட்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இந்தோனேசிய தேசிய பேரிடர் மேலாண்மை தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தோனேசியாவில் கடந்த 14ஆம் திகதிமுதல் கடுமையான மழை பெய்து வருகிறது. நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது என்று தெரிய வருகின்றது.

2004ஆம் ஆண்டில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் 9.3 என்ற ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட சுனாமி தாக்குதலை அடுத்து 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சூடானில் பழங்குடியினர் மோதல்: 83 பேர் கொலை; 160 பேர் காயம்

கார்டோம், ஜன. 19

சூடானின் மேற்கு டர்பர் மாநிலத்தின் தலைநகரான அல் ஜெனீனாவில் பழங்குடியினரிடையே ஏற்பட்ட மோதலில் 83 பேர் உயிரிழந்தனர் மற்றும் 160 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டர்பர் மாகாணத்தின் உள்ள அல் ஜெனீனா நகரில் மசாலித் என்ற பழங்குடியின குழுவினருக்கும் மற்றும் அராப் பழங்குடியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் ஏற்பட்ட வன்முறையில், வீடுகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

இதனால், கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து நடைபெற்ற இந்த மோதலில் 83 பேர் கொல்லப்பட்டனர். 160இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதையடுத்து, மேற்கு டர்பரில் சனிக்கிழமை ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது.





## ஜோ ரூட் புதிய சாதனை

காலி, ஜன. 19

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஜோ ரூட் கப்டனாக இங்கிலாந்து அணிக்கு தேடிக் கொடுத்த 24ஆவது வெற்றி இதுவாகும். இதன்மூலம் அதிக வெற்றிகளை பெற்ற இரண்டாவது கப்டன் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

மைக்கல் வோகன் 51 போட்டிகளில் 26 வெற்றி, 11 தோல்வியுடன் முதல் இடத்தில் உள்ளார். ஜோ ரூட் 45 போட்டிகளில் 24 வெற்றி, 15 தோல்வி, அன்ட்ரூ ஸ்ரோஸ் 50 போட்டிகளில் 24 வெற்றி, 11 தோல்விகளுடனும், அலஸ்ரெயர் குக் 59 போட்டிகளில் 24 வெற்றி, 22 தோல்விகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

மேலும், இலங்கை மண்ணில் தொடர்ச்சியாக ஐந்து டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று இங்கிலாந்து அணி சாதனைப்படைத்துள்ளது.

# இங்கிலாந்து அணியிடம் மண்டியிட்டது இலங்கை

காலி, ஜன. 19

தாய் மண்ணில் இடம்பெற்ற இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 7 விக்கெட்களால் மண்கௌவியது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணி இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி.

முதல் இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி 135 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. தனது முதல் இனிங்ஸில் ஆடிய இங்கிலாந்து அணி ஜோ ரூட்டின் அசத்தலான இரட்டை சதத்தின் உதவியால் 421 ஓட்டங்களைக் குவித்தது.

இரண்டாவது இனிங்ஸில் இலங்கையின் தொடக்க வீரர்களான குஷல் பெரேரா, லஹிரு திரிமன்னே அபாரமான தொடக்கத்தை கொத்திருந்தனர். பெரேரா 62, திரிமன்னே 111, மத்தியூஸ் 71 ஓட்டங்களை பெற்று அசத்த, இலங்கை அணி 359 ஓட்டங்களைக் குவித்தது.



74 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 24.2 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பெயர்ஸ்ரோ 35 ஓட்டங்களையும், டான் லோரன்ஸ் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இதனால் இங்கிலாந்து அணி 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் எம்புல்தெனிய 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஜோ ரூட் தெரிவானார். (ஐ)



### இந்தியாவுக்கு 332 இலக்கு

# சிராஜ் துல்லிய பந்துவீச்சு: அவுஸ்திரேலியா 294

பிரிஸ்பேன், ஜன. 19

முஹமது சிராஜ், ஷர்துல் தாகூர் ஆகியோரின் அசத்தல் பந்துவீச்சால் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இனிங்ஸில் 294 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால், இந்திய அணிக்கு 328 ஓட்டங்கள் வெற்றிக்கான இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இறுதிப் போட்டியின் நான்காம் நாளான நேற்று முடிவின்போது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களை எடுத்துள்ளது. ரோஹித் சர்மா 4 ஓட்டங்களுடனும், ஷுப்மன் கில் ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி, பிரிஸ்பேனின் காபா மைதானத்தில் இதுவரை அதிக பட்சமாக 236 ஓட்டங்களை கடந்த 1951ஆம் ஆண்டு மேற்கு இந்தியத் தீவுகள் அணி துரத்தி வென்றதுதான் வரலாறு. அதன்பின் எந்த அணியும் இங்கு 4ஆவது இனிங்ஸில் துரத்தி அவுஸ்திரேரேலியாவை வென்றதில்லை. இதேபோன்று 1988ஆம் ஆண்டுக்குப் பின் காபா மைதானத்தில் நடந்த எந்த டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி தோல்வியைச் சந்தித்தது இல்லை.

மூன்றாம் நாளான நேற்று முன்தினம் ஆட்டம் முடிவின்போது அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களை சேர்த்திருந்தது. வோர்ணர் 20, ஹரிஸ் ஒர் ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

ஆனால், நேற்று நான்காம் நாள் ஆட்டத்தில் 272 ஓட்டங்களுக்கு அவுஸ்திரேலிய அணியை இந்தியப் பந்துவீச்சாளர்கள் ஆட்டமிழக்கச் செய்தனர். 75.5 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 294 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றது.

அதிலும், இந்தத் தொடரில் அறிமுகமான முஹமது சிராஜ் முதல் முறையாக டெஸ்ட் கிரிக்கெட்டில் 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். துணையாக இருந்த ஷர்துல் தாகூர் 4 விக்கெட்களை வீழ்த்தினார். அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் பெற்ற 33 ஓட்டங்கள் முன்னிலையோடு சேர்த்து இந்திய அணி வெற்றி பெற 328 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, முதல் இனிங்ஸில் ஆஸி. அணி 369 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி 336 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

நான்காம் நாளான நேற்று வோர்ணர், ஹரிஸ் இணை ஆட்டத்தை தொடங்கியது. இருவரும் சிறப்பான ஆட்டத்துடன் ஆரம்பித்த நிலையில், ஹரிஸ் 38 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் சிராஜ் பந்துவீச்சில் ரிஷப் பந்த்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முதல் விக்கெட்டுக்கு இருவரும் 89 ஓட்டங்கள் சேர்த்துப் பிரிந்தனர். அடுத்துவந்த லபுஸ்சாக்னே, வோர்ணருடன் சேர்ந்தார். வோர்ணர் அரை சதத்தை நோக்கி நகர்ந்த நிலையில், வாஷிங்டன சுந்தரின் பந்துவீச்சில் கால்காப்பில் வாங்கி 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

முதல் இனிங்ஸில் சதம் அடித்து மிரட்டிய லபுஸ்சாக்னே இந்த முறை தாகூர் பந்துவீச்சில் விரைவாக வெளியேறினார். இரண்டாவது ஸ்லிப்பில் ரோஹித் சர்மாவிடம் பிடிகொடுத்து 25 ஓட்டங்களுடன் லபுஸ்சாக்னே ஆட்டமிழந்தார். அடுத்துவந்த மத்தியூ வேட் ஓட்டம் ஏதும் சேர்க்காமல் சிராஜ் பந்துவீச்சில் டக் அவுட்டில் வெளியேறினார்.

ஒரு கட்டத்தில் காலை தேநீர் இடைவேளையின்போது, ஒரு விக்கெட் இழப்புக்கு 89 ஓட்டங்கள் சேர்த்து ஆஸி. அணி வலுவாக இருந்தது. ஆனால், மதிய உணவு இடைவேளைக்குச் செல்லும்போது 149 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்தது.

ஸ்மித், கமரூன் கிறீன் ஓரளவுக்கு நிலைத்து ஆடினர். நிதானமாக ஆடிய ஸ்மித் அரை சதம் அடித்தார். ஸ்மித் 55 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது சிராஜ் வீசிய ஷோர்ட் பந்தைத் தூக்கி அடிக்க முயன்று ரஹானேவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். 5ஆவது விக்கெட்டுக்கு கிறீன், ஸ்மித் ஜோடி 73 ஓட்டங்கள் சேர்த்தனர்.

அதன்பின், கேப்டன் பெய்ன் களமிறங்கி கேமரூனுடன் சேர்ந்தார். இருவரும் சிறிது நேரமே இணைந்திருந்தனர். ஷர்துல் தாக்கூர் வீசிய பந்தில் 2-வது ஸ்லிப்பில் நின்றிருந்த ரோஹித் சர்மாவிடம் கேட்ச் கொடுத்து கேமரூன் 37 ஓட்டங்களுடன் விக்கெட்டை இழந்தார்.

பெய்ன் 27 ஓட்டங்களிலும், ஸ்ரார்க் ஒரு ரன்னிலும், லேயான் 13 ரன்களிலும், ஹேசல்வுட் 9 ரன்களிலும் விரைவாக விக்கெட்களை இழந்தனர். 227 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்திருந்த அவுஸ்திரேலிய அணி அடுத்த 67 ஓட்டங்களுக்கு மீதமிருந்த 5 விக்கெட்களை 2-வது பகுதியில் விரைவாக இழந்தது.

இந்தியத் தரப்பில் முஹமது சிராஜ் 5 விக்கெட்களையும், ஷர்துல் தாக்கூர் 4 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

328 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் ரோஹித் சர்மா, ஷுப்மன் கில் களமிறங்கினர். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே மழை பெய்ததையடுத்து, ஆட்டம் நிறுத்தப்பட்டது. நான்காவது நாள் இறுதியில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. ரோஹித் சர்மா 4 ஓட்டங்களுடனும் கில் ஓட்டம் எதுவும் சேர்க்காமலும் களத்தில் உள்ளனர். (ஐ)




# சிராஜை அணைத்து பாராட்டினார் பும்ரா

பிரிஸ்பேன், ஜன. 1

பிரிஸ்பேன் டெஸ்டில் 5 விக்கெட்கள் எடுத்து அசத்திய இந்திய அணியின் சிராஜைக் கட்டி அணைத்து சகவீரர் பும்ரா பாராட்டியது ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

இந்திய அணி, அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் நான்காவது டெஸ்ட் போட்டி நடக்கிறது.

அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸில் 369 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 294 ஓட்டங்களையும் எடுத்தது.

இந்தியா முதல் இனிங்ஸில் 336 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் அந்த அணிக்கு 328 ஓட்டங்கள் வெற்றிக்காகத் தேவை.

இந்நிலையில் நேற்று இரண்டாவது இனிங்ஸில் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் சிராஜ் 5 விக்கெட்களை கைப்பற்றி அசரத்தினார்.

சிராஜின் தந்தை அண்மையில் மரணமானார். அவுஸ்திரேலியாவில் இருந்தமையால் தந்தையின் இறுதிச் சடங்கில் சிராஜ் பங்குகொள்ள முடியவில்லை. போட்டி தொடங்கியபோது இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது தந்தையை நினைத்து சிராஜ் அழுதமை பலரின் மனதைத் தொட்டது.

இந்நிலையில், நேற்று அவுஸ்திரேலியாவின் இனிங்ஸ் முடிந்து ஓய்வறைக்கு திரும்பிக்கொண்டிருந்த சிராஜை பௌண்ட்ரி எல்லைக்கு அருகில் பும்ரா கட்டியணைத்துப் பாராட்டினார். இந்த அழகான தருணத்தைப் பாராட்டி சமூக வலைத் தளங்களில் ரசிகர்கள் பதிவுகளை இட்டு வருகின்றனர். (ஐ)

## 18 வயதுக்கு மேற்பட்ட

# அனைத்து பிரஜைகளுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி



கொழும்பு,ஜன.19

**18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கும் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

இந்த முன்மொழிவை எண்ணி எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், இந்தத் தீர்மானம் நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பயிற்சி மக்கள் தமது சொந்தக் காலில் நிற்கவும் தலைமைத்துவக் குணங்களை ஊக்குவிக்கவும் ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கும் நாட்டுக்கு பங்களிக்கவும் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நடைமுறைகள் பல நாடுகளுக்கு ஒழுக்கத்தை ஏற்படுத்த உதவியுள்ளதுடன், இது இளைஞர்களுக்குப் பெருமளவில் பயனளிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ)






# சபை அமர்வுகளில் ரஞ்சனை பங்கேற்க வைக்க நடவடிக்கை

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.19

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க வைக்க அனுமதிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் தனது ருவிட்டர் பக்கத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த ருவிட்டர் பக்கத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு:

"ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்றக் கூட்டங்களில் சமுகமளிக்க அனுமதிக்குமாறும், இது நீதிமன்ற வரம்புக்கு வெளியே பாராளுமன்றத்தின் உரிமை என்ற அடிப்படையில், சபாநாயகரை ஐக்கிய மக்கள் சக்தியான எதிரணி அதிகாரபூர்வமாகக் கோரும்" என பதிவேற்றியுள்ளார். (எ)

# தனிமைப்படுத்தலை பின்பற்றாவிடின் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது

## மக்களுக்கு அஜித் ரோஹண அறிவுரை

கொழும்பு,ஜன.19

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டதன் காரணமாக அங்கு புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டால், அந்தப் பகுதிகளைத் தொடர்ந்தும் தனிமைப்படுத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அதனால் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

காத்தான்குடி பொலிஸ் பிரிவும், சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், வீதிகள் மற்றும் தொடர்மாடி குடியிருப்புக்கள் மாத்திரமே தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் 3,469 பேர் அன்ரிஜென் பரிசோதனைகளுக்கும், 190 பேர் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுள் 178 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களுள் 140 பேர் காத்தான்குடி பகுதியைச் சேர்ந்தவர்கள். ஏனைய 38 பேரும் வெளிபிரதேசங்களிலிருந்து அங்கு வந்தவர்களாவர்.

இந்நிலையில் அந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மற்றும் சுகாதார ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அங்கு புதிய தொற்றாளர்கள் உருவாகுவதற்கான வாய்ப்புள்ளது. இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டால், அந்தப் பகுதிகளை நீண்ட நாள்களுக்குத் தனிமைப்படுத்தி வைக்கவேண்டிய நிலைமையே ஏற்படும். அதனால், அப்பகுதி மக்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

இதேவேளை, நீண்டகாலமாக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டு, தற்போது விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளுக்கமைய செயல்பட வேண்டியது கட்டாயமாகும். இதன்போது மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கமைய அனைவரும் ஒன்றுகூடி உணவு உட்கொள்ளுதல், கலந்துரையாடுதல் மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபடல் போன்ற செயல்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒன்றுக்கூடி செயல்படுவதால் மீண்டும் அந்தப் பகுதிகளில் வைரஸ் பரவலடைவதற்கு வாய்ப்புள்ளது. அதனால் அத்தகைய செயல்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாதவர்களை அடையாளம் காண்பதற்கான சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. அதற்கமைய மேல் மாகாணத்தைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் நேற்றுத் திங்கட்கிழமை காலை ஆறுமணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் முக்ககவசம் அணியாமை தொடர்பில் 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 2,605 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது- என்றார். (எ)

# விசாரணை நடவடிக்கைகளுக்கு இடையூறு எனில் அறிவியுங்கள்

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு



கொழும்பு,ஜன.19

பொலிஸ்மா அதிபரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்று கூறிக்கொண்டு பொலிஸாரின் விசாரணை நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் மற்றும் இடையூறு விளைவிக்கும் நபர்கள் தொடர்பில் உடனே உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு யாருக்குமே பொலிஸாரின் செயல்பாடுகளுக்கு தலையீடு செலுத்தமுடியாது. இந்நிலையில் எந்த அதிகாரியாவது இத்தகைய நபர்களின் வேண்டுகோளுக்கிணங்க செயல்பட்டால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரால், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் கட்டளை அதிகாரிகள் மற்றும் பணிப்பாளர்கள், பிரதேசங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள், மாவட்டங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட அரச நிறைவேற்று அதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பரிசோதகர்களுக்காக அனுப்பப்பட்ட கடிதத்திலே மேற்கண்டவாறு அவர் குறிப்பட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொலிஸ்மா அதிபரின் உறவினர்கள், நண்பர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் பொலிஸ் நிலையங்களுக்குத் தொடர்பு கொண்டு, அங்கு இடம்பெறும் விசாரணை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகத் தெரியவந்துள்ளது. இந்நிலையில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசேட விசாரணைப் பிரிவுகளில் இடம்பெறும் விசாரணை நடவடிக்கைகளுக்கு பொலிஸ்மா அதிபரின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் என்றுக் கூறிக்கொண்டு எவருக்கும் தலையீடு செய்யமுடியாது.

அதனால், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு யாராவது அவ்வாறு தொடர்பு கொண்டு அவர்களின் செயல்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தால் அதுதொடர்பில் , 017-8591859 என்ற இலக்கத்தை தொடர்புக் கொண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம். கீர்த்திப்பால, 071-8592290 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ஐ.என்.சேனாரத்ன, மற்றும் 071-8592022 என்ற தொலைப்பேசி இலக்கத்தின் மூலம் பிராதான பொலிஸ் பரிசோதகர் கே.என்.நாகந்தல ஆகியோரைத் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

இதன்போது யாராவது ஒருவர் தான் பொலிஸ்மா அதிபரின் உறவினர் என்று கூறிக்கொண்டு, ஒரு சாராருக்குச் சார்பாக செயல்படுமாறு வேண்டுகோள் விடுத்தல் அதற்கிணங்க செயல்பட வேண்டாம். இந்நிலையில் அனைத்து விசாரணை நடவடிக்கைகளையும் பக்கச்சார்பின்றி நியாயமான முறையில் மேற்கொள்ளுங்கள்.

அவ்வாறு எந்த அதிகாரியாவது ஒரு பிரிவினருக்கு ஆதரவாகச் செயல்பட்டு, அதனால் மற்றைய தரப்பினருக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அதுதொடர்பான பொறுப்பை அந்த அதிகாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதேவேளை இந்த ஆலோசனைகளுக்குப் புறம்பாக யாராவது ஒரு அதிகாரி செயல்பட்டிருந்தால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநகர சபை உறுப்பினர் உட்பட 10 பேருக்கு நேற்று பிடியாணை

கொழும்பு,ஜன.19

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் குலதிஸ்ஸ கீகனகே மற்றும் 9 பேரைக் கைது செய்ய நேற்றுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28 ஆம் திகதி தெமட்டகொடையிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கட்டட வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மன்றில் முன்னிலையாகத் தவறிய நிலையில் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

ஈழநாடு



# கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் மூவருக்கு கொரோனா தொற்று

## தொற்று அச்சத்தில் மாணவர்கள்

மட்டக்களப்பு, ஜன.19

**கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் இருவரை மேலதிக சிகிச்சைகளுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மற்றொருவர் இரண்டு நாட்களாகியும் இன்னமும் குறித்த பல்கலைக்கழக விடுதியிலே தங்கி இருக்கிறார் என்று பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

இம்மாதம் 6ஆம் திகதி திருகோணமலை வளாகத்திற்கு தாம் வருகை தந்ததாகவும், அவ்வாறு வரும்போது எந்தவித மான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்க பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

மேலும், அனைத்து மாணவர்களும் பொது மலசல கூடங்களை பயன்படுத்துவதோடு உணவு உண்பதற்காக அதற்காக ஒதுக்கப்பட்ட உணவு உண்ணும் அறையில் தாம் ஒன்று கூடுவதன் காரணமாக தம்மை நோய் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தாம் போராடி வருவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

இதனால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு இதற்கான தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# ராஜித எம்.பிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

கொழும்பு, ஜன. 19

முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட மூவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தை 2014 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழே இவ்வாறு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு குறித்த சந்தேக நபர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது. இந்நிலையில், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் பிரதீப் ஹெட்டியாரச்சி முன்னிலையில் இன்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன உட்பட பிரதிவாதி கள் மூவரையும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்க நீதிவான் பிரதீப் ஹெட்டியாரச்சி உத்தரவிட்டுள்ளார்.

இதேநேரம், பிரதிவாதிகளின் கைவிரல் அடையாளங்களைப் பெற்று, அவர்களது முன்னைய குற்றங்கள் குறித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் நீதவான் பணித்துள்ளார்.

(ஐ)

### 14 வயதுச் சிறுவனை துஷ்பிரயோகம் செய்த பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஜன. 19

14 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அநுராதபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 58 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர், அநுராதபுரம் நகரத்தை அண்மித்த பகுதியில் வைத்து மூன்று சந்தர்ப்பங்களில் சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுவன் வைத்திய பரிசோதனைகளுக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மேல் மாகாணத்தில் பாடசாலைகளை மீளத் திறப்பது குறித்து புதன் பேச்சு

கொழும்பு, ஜன.19

அடுத்த இரு வாரங்களுக்குள் மேல் மாகாணத்தில் அனைத்து தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

சுகாதார அதிகாரிகள், ஜனாதிபதி செயலணி மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், மேல் மாகாணத்தில் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்காக சுகாதார ஆலோசனையின் பிரகாரம் கடுமையான திட்டம் வகுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை திறக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தேசிய பாடசாலைகளின் தரம் 6இற்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜன. 19

தேசிய பாடசாலைகளில் தரம் 6இற்கு அனுமதிப்பதற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்ட நிலையில் மேன்முறை யீடுகளை முன்வைக்கும் கால அவகாசத்தை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதனடிப்படையில் பெப்ரவரி 15ஆம் திகதி முதல் மார்ச் 14 வரை இணையத்தின் ஊடாக மட்டும் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

மேன்முறையீட்டு விண்ணப்பத்தை https://g6application.moe.gov.lk என்ற முகவரியில் இணையத்திலேயே சமர்ப்பிக்க முடியும் என்றும் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.




காலை
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

பகல்
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்

இரவு
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

# இராணுவ ஊடக பணிப்பாளராக பிரிகேடியர் நிலந்த பதவியேற்பு

கொழும்பு, ஜன. 19

இராணுவத்தின் 19ஆவது ஊடகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன நேற்று திங்கட்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்திருந்தார்.

ஸ்ரீஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமையகத்தில் எளிமையான முறையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தனது கடமைகளை பொறுப்பேற்றார் என்று இராணுவ இணையத்தளம் தெரிவித்தது.

இவருக்கு முன்னர் இராணுவத்தின் ஊடகப்பணிப்பாளராக பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க பணியாற்றினார்.

இந்நிலையில் இராணுவத்தின் புதிய ஊடகப்பணிப்பாளராக பதவியேற்றுக் கொண்டுள்ள , பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன இதற்கு முன்னர் , யாழ்.மாவட்டத்திற்கான இராணுவ தலைமையகத்தின் ஸ்தாபிக்கப்பட்டுள்ள, 551 ஆவது படையணியின் தளபதியாக கடமை புரிந்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவிலிருந்து விலகியோரை மீள இணைக்கும் பணி ஆரம்பம்

## புதிய பொதுச்செயலர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன 19

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களை மீள இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று கட்சியின் புதிய பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அதற்கமைய கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்ட இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் நேற்று மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொண்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தலைமையில் இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மீண்டும் ஐ.தே.கவுடன் இணைந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரத்தினபுரி மாவட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள அமைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன மற்றும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார உட்பட புதிய பதவிகளுக்குத் தெரிவானவர்களைக் கொள்ளுப்பிட்டியிலுள்ள இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# போதைப்பொருள் கடத்தலுக்கு உதவிய பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஜன. 19

போதைப்பொருள் கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அநுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் 43 வயதுடைய அதிகாரி ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து சந்தேகத்துக்கிடமான 5 கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவரை 7 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் கூறினார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu

### 10 ஆண்டுகளின் பின்னர்

# பங்குகளின் விலை சுட்டெண் உச்சம்!

கொழும்பு, ஜன.19

**கொழும்பு பங்குச் சந்தை அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் புதிய உச்சத்தை எட்டியுள்ளது.**

**நாளாந்த புள்ளிகளின் அடிப்படையில் கொழும்பு பங்கு சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் 7922.66 புள்ளியாக நேற்று பதிவானது.**

இதற்கு முன்னர் 2011ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டென் 7811.00 புள்ளியாக பதிவாகி இருந்தே அதி கூடிய பதிவாக இருந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் இதுவரை உலகின் மிகச் சிறந்த செயல்திறன் குறியீடுகளில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிறுவனங்களில் நம்பிக்கை வைத்த முதலீட்டாளர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் பொருளாதாரத்தைப் புதுப்பிப்பதற்கான தனது ஆணையை நிறைவேற்ற அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)







மண்டைதீவில் கடற்படையினரின் காணி சுவீகரிப் புக்கு எதிராக பொதுமக்கள், அரசியல்வாதிகள் நேற்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டபோது...

# இரு நாட்களே பாராளுமன்றம்

கொழும்பு, ஜன. 19

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பாராளுமன்ற அமர்வுகளை இந்த வாரத்தில் இரண்டு நாட்களுக்கு மாத்திரம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாராளுமன்ற அமர்வுகளை இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமை மட்டுமே இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. (ஐ)

# பி.சி.ஆர். மேற்கொள்ளப்படாத வீடுகளுக்கும் தனிமைப்படுத்தல்!

## வவுனியாவில் பொறுப்பற்ற செயல்

வவுனியா, ஜன. 19

பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப் படாத வீடுகள் சில வவுனியா சாந்தசோலையில் நேற்று தனிமைப்படுத்தப்பட்டன. அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட இந்த நடவடிக்கைக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியது.

இதையடுத்து தனிமைப்படுத்தல் ஒட்டப் பட்ட சுவரொட்டிகள் கிழித்து அகற்றப்பட்டன என்று தெரிய வருகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

வவுனியா சாந்தசோலை வீட்டுத்திட்டம் பகுதியில் வசித்துவரும் வைத்தியசாலையில் பணியாற்றும் ஒருவர் மற்றும் சதொசவில் பணியாற்றும் ஒருவர் ஆகியோரின் வீடுகளுக்கு நேற்று பிற்பகல் 2 மணியளவில் சென்ற சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் எவ்விதமான அறிகுறிகள் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளாத வீடுகளில் குறித்த வீடு தனிமைப் படுத்தப்பட்டன என்று காட்சிப்படுத்தப்படும் சுவரொட்டியை ஒட்டிச் சென்றுள்ளார்.

எனினும், அவ்வீட்டிலுள்ளவர்கள் அது பற்றி குறித்த சுகாதாரப்பரிசோதகருடன் இவ்வீட்டில் எவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத் தப்படவில்லை. ஆகவே, தனிமைப்படுத் தப்பட்டதாக எவ்வாறு சுவரொட்டியை ஒட்டுவீர்கள் என்று கேள்வி எழுப்பினர்.

இது பின்னர் தர்க்கமாக மாறியது. இதையடுத்து இந்த விடயத்தில் கிராம அமைப்புக்கள் தலையிட்டன. அங்கு சென்ற கிராம அமைப் பினரால் தெளிவுபடுத்தப்பட்டு அறிவுறுத் தல்கள் வழங்கின. இதையடுத்து, தவறுதலாக இந்த சுவரொட்டி ஒட்டப்பட்டு விட்டது என்று கூறி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அவற்றை அகற்றிச் சென்றுள்ளார்.

எனினும், இவ்வாறு பொறுப்பற்றவிதமாக செயல்படும் சுகாதார உத்தியோகத்தர்கள் மக் களை அச்சுறுத்துகின்றனர் என்றும், இதனால் மக்கள் மத்தியில் அச்ச நிலை தோற்றுவிக் கப்பட்டு மன உழைச்சலுக்குட்பட்டு வருவதாகவும் இவ்வாறு இடம் பெறும் நடவடிக்கைகள் தடுத்து நிறுத்துமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# கிழக்கு முனையம் வெளிநாடுகளுக்கு வழங்கப்படுவது மகிழ்ச்சி தருகிறது

## மங்கள சமரவீர அரசுக்கு பாராட்டு



கொழும்பு, ஜன. 19

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு பங் களிப்பு செய்வது நாட்டை காட்டிக் கொடுக்கும் செயல் என கூறிய தரப்பினரே தற்போது வெளிநாட்டு முதலீட்டா ளர்களுக்கு வாய்ப்பு வழங்கியுள்ளமை குறித்து தாம் மகிழ்ச்சியடைகிறார் என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பித்த பொருளாதார கட்டமைப்பின் காரணமாக இவ்வாறு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பிரவேசிப்பதாக அவர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்திற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை இணைப்பது தொடர்பில் நாட்டு பற்றுடையவராக தாம் மகிழ்ச்சியடைவதாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15607 \| வே \|1985<br>அச்செழு \| இந்து \| செவ் : 12<br>Driver \| Sri lanka \|<br>அனுஷம்(விருச்சிகம்) \| 170செ.மீ | 14514\| வே \|1994<br>சாவகச்சேரி \| இந்து \| செவ் : 12<br>Lecturer \| Sri lanka \|<br>பூரட்டாதி(கும்பம்) \|157செ.மீ |
| 15691 \|வே \|1985<br>புத்தூர் \| இந்து \| Sri lanka \|<br>Driver \| செவ் : 12 \| பூரம்(சிம்மம்) \|<br>175செ.மீ | 14291 \| வே \|1989<br>\|Divorced உடுப்பிட்டி \| இந்து<br>Sri Lanka \|<br>\|பூரம்(சிம்மம்) \| 162செ.மீ |
| 15251\| ந \|1985<br>யாழ்ப்பாணம் \| இந்து \|<br>Business \| Sri lanka \|<br>மூலம்(தனுசு) \|170.6செ.மீ | 14875\| வே \|1991<br>உடுவில் \| இந்து \| Sri lanka \|<br>செவ் : 12 \| அத்தம்(கன்னி)<br>Business Solutions Engineer<br>168செ.மீ |
| 15185\|வே \|1985<br>காரைநகர் \| இந்து<br>Cashier \| UK \|<br>பூசம்(கடகம்) \| 164செ.மீ | 14868\| வே \|1992<br>இளவாலை \| இந்து<br>Doctor \|Sri Lanka \|<br>திருவாதிரை (மிதுனம்) \| 170செ.மீ |
| 15029\| வி \|1985<br>கரணைவாய் \| இந்து \|<br>Business \| UK \| ரோகிணி(ரிஷபம்)<br>170செ.மீ | 15266\| வே \|1986<br>வட்டுக்கோட்டை \| இந்து<br>Assistant Accountant \|<br>Sri Lanka \| அஸ்வினி(மேடம்) \|<br>170செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர், யாழ் கல்வி வலயம்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - நேரலை



5.30 மணி : டேக் இட் ஈஸி
6.00 மணி : ட்றெய்லர் டைம்




6.30 மணி : மூவி டோக்கீஸ்



**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
யோகி பாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நயினாதீவு மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திருவிழா

**பகல்**
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி :அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் ஏழாலை வசந்தபுரம் வசந்தநாக பூஷணி அம்மன் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித அந்தோனியார் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி
5.00 மணி : நிதர்சனம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்